
www.padippakam.com

1-15 டிசம்பர் 1996 ☐ ரூ. 3.50

**ஜெயா வழியில் லல்லுவின் 'சமூக நீதி'**

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# மரணத்தை வென்று வாழும் தோழர்!

திருச்சி பகுதி புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியில் செயல்பட்டு வந்த தோழர் பிரபாகரன் என்ற செல்வராஜ், திடீரென்று தாக்கிய நெஞ்சு வலியின் காரணமாக 9.10.96 அன்று நள்ளிரவில் தனது 45-வது வயதில் மரணமடைந்தார்.

தோழர். பிரபாகரன் உழைக்கும் மக்களின் விடுதலையை நெஞ்சிலேந்தி, கடந்த 20 வருடங்களாக அமைப்பில் முழு மூச்சுடன் செயல்பட்டு வந்தார். திருச்சி பகுதியில், தொடக்க நிலையில் அமைப்பைக் கட்டி வளர்க்க தன்னலம் பாராது முன்னின்று உழைத்த தோழர்களுள் இவரும் ஒருவர். புதிய தொடர்புகளை வென்றெடுத்து அமைப்பாக்குவதில் சிறந்த ஆற்றல் படைத்தவர் இத்தோழர். இறப்பதற்குச் சற்று நேரம் முன்பாகக் கூட, உள்ளூராட்சித் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார் அவர். அவ்வேலைகளை முடித்து விட்டு வீட்டிற்குச் சென்ற சிறிது நேரத்திலேயே நெஞ்சு வலி கண்டு தோழர் துவண்டு விட, மருத்துவரின் அறிவுரைப்படி இருதய நோய் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலே மாண்டு போனார் தோழர் பிரபாகரன்.



தோழர் பிரபாகரன்

திருச்சி நகரில் புதிய ஜனநாயகம் இதழை விற்பதனை முழுநேரப் பணியாக மேற் கொண்டு ஐந்தாண்டுக் காலம் செயல்பட்டார் அவர். அக்காலத்தில் பத்திரிகை தேக்கம் என்ற விமர்சனம் எழ வாய்ப்பின்றி, தொழிற்முறை விற்பனை பிரதிநிதிகளைப் போன்று முன்னுதாரணமாகச் செயல்பட்டார். இதழ் விற்பனையில் கிடைக்கும் கழிவுத் தொகையைக் கொண்டே தன்னையும் பிற தோழர்களையும் பராமரித்துக் கொள்ளும் பாட்டாளி வர்க்கப் பண்பில் உயர்ந்து நின்றார் தோழர்.

போர்க்குணம், எளிமையாகப் பழகுதல் இவை போன்ற பண்புகள் தோழரிடம் தன்னகத்தே குடி கொண்டிருந்ததால், அமைப்புத் தோழர்களும் பகுதி வாழ் மக்களும் அவரிடம் மிகுந்த மதிப்பும், ஈடுபாடும் கொண்டிருந்தனர்; கடினமான பணிகளைக் கூட இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டு நிறைவேற்றப் போராடினார்; அமைப்பு நலன், அமைப்பு கட்டுப்பாடுகளை மதித்து நடந்த தோழர் பிரபாகரன் பிற தோழர்களும் அவற்றை வழுவாது கடைப்பிடிக்க கோரிப் போராடுவதில் தவறியதில்லை.

தோழர், பிரபாகரன் தனது 36 வயதில் புரட்சிகர திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் பின் ஏற்பட்ட குடும்பச் சூழல் காரணமாக தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றிக் கொண்டே, அமைப்பு வேலைகளிலும் பங்கெடுத்துக் கொண்டார். அக்காலக் கட்டங்களில் அமைப்பு எடுத்த போராட்டங்களில் முன்னணி வீரராகக் கலந்து கொண்டு சிறை சென்றார். அவர் இறந்த பின்பு, தோழரது துணைவியார், "உறவினர் வீடுகளுக்குச் செல்ல மாட்டேன்; அமைப்பு தோழர்களுடன் அமைப்புடனும் தான் இருப்பேன்" எனக் கூறிவிட்டார். இதிலிருந்தே தோழர் தனது துணைவியாரிடமும் குழந்தைகளிடமும் புரட்சிகர பண்பை ஊட்டி வளர்த்துள்ள பாங்கைப் புரிந்து கொள்ளலாம்.

"தோழர் பிரபாகரன் மறைந்து விட்டார்; ஆனால் இம்மண்ணின் விடுதலைக்காக, அவர் ஊட்டி வளர்த்த உணர்வுகள் தோழர்கள் மத்தியில் மறையப் போவதில்லை. தனது வாழ்நாளின் இறுதிவரை பாட்டாளிவர்க்கப் புரட்சியின் வெற்றிக்காக தன்னலம் பாராது உழைத்த அத் தோழரின் பெயரை, அவ்வுணர்வுகள் என்றென்றும் உழைக்கும் மக்கள் மத்தியில் உச்சரித்துக் கொண்டே இருக்கும்" எனக் கூறி, மறைந்த அத்தோழருக்கு சிவப்பஞ்சலியைக் காணிக்கையாக்குவோம்!

பு.மா.இ.மு., திருச்சி.

## மனுதர்ம ஆட்சிக்கு எதிராக கோயில் நுழைவுப் போராட்டம்

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் - நெமிலி ஒன்றியத்திலுள்ள கிராமம் கணபதிபுரம். இங்கு 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக் கிராம மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் தாழ்த்தப்பட்டவர்கள். கணபதிபுரத்தில் தொன்மை சிறப்புள்ள தாந்தோணியம்மன் ஆலயம் உள்ளது; ஏரி, அதைச் சுற்றியுள்ள மரங்கள், கோயில் மானியங்கள், ஏரி புறம்போக்கு நிலங்கள் என ஏராளமான பொதுச் சொத்துக்களும் இக்கிராமத்திலுள்ளன.

இச்சொத்துக்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வித உரிமையும் - பங்கும் தராது, சட்டத்திற்கு புறம்பாக மேல் சாதியினரே அனுபவித்து வருகின்றனர். மேலும் தாந்தோணியம்மன் கோவிலினுள் நுழைவதற்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமை கிடையாது. இம்மேல்சாதி ஆதிக்கத்திற்கு முடிவு கட்டும் முகமாக, கணபதிபரம் தாழ்த்தப்பட்ட மக்கள் "அம்பேத்கர் பாசறை" எனும் அமைப்பின் தலைமையில் தாந்தோணியம்மன் கோயில் குடமுழுக்கு தினத்தன்று (17.8.96), கோயில் நுழைவுப் போராட்டத்தினை அறிவித்தனர்.

போராட்டம் என்ற முழக்கம் கேட்டவுடன் அதிகார வர்க்கம் போலீசுடன் கணபதிபுரத்தை வட்டமிட்டது. இராணிப்பேட்டை ஆர்.டி.ஓ. நல்லதம்பி, வட்டாட்சியர் செங்குட்டுவன் இருவரும் தாழ்த்தப்பட்டவர் - மேல் சாதியினரிடையே சமரசம் செய்து வைக்க முயன்றனர்.

இந்நிலையில் ஆகஸ்ட் 18-ந் தேதி அன்று மதியம் அம்பேத்கர் பாசறை தலைவர் செல்வராஜ், தாழ்த்தப்பட்டவரான முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி கருப்பண்ணனுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள காலனியில் இருந்து கணபதிபுரத்திற்கு வந்தார். அப்பொழுது அவரையும், அவருக்குத் துணையாக வந்த தேவராசன், பார்த்திபன், பரந்தாமன், மணி, பாபு ஆகியோரையும் மேல் சாதி வெறியர்கள் தாக்கினர்.

இத்தாக்குதல் தொடர்பாக ஏழு பேரை போலீசார் கைது செய்திருப்பினும், முக்கிய குற்றவாளியான தி.மு.க. - நெமிலி ஒன்றியச் செயலர் கிருஷ்ணன் கைது செய்யப்படவில்லை; அதிகாரிகள் வாக்களித்தபடி 1989 வன் கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் வழக்கு பதிவு செய்யவில்லை. அதேபொழுதில், "தாழ்த்தப்பட்டவர்கள் தங்களைத் தாக்கி விட்டதாக" மேல் சாதியினர் கொடுத்த பொய்ப் புகார் மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது அதிகார வர்க்கம்.

இத்தாக்குதலின் பின் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் முன்னிலையில் தாழ்த்தப்பட்டோர் - மேல் சாதியினரிடையே பேச்சு வார்த்தை நடந்தது. இதில், "பொதுச் சொத்துகள் சட்டத்திற்கு உட்பட்டு ஏலத்தில் விடப்படும்; பிற சாதியினரைப் போல தாழ்த்தப்பட்டோரும் இறை வழிபாட்டிற்காக தாந்தோணியம்மன் கோவிலினுள் நுழையத் தடையேதுமில்லை" என உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

தகவல்: அம்பேத்கர் பாசறை, தமிழ்நாடு.

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11
இதழ்: 24
தொகுதி: 12
இதழ்: 1 - 2
1 நவ. '96 - 15 டிச. '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## யானையைப் பானைக்குள் அடைக்க முடியுமா?

ஜெயலலிதா - சசிகலா குடும்பத்தினர் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டு ஆறு மாதங்களாகி விட்டன. இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளால் தமிழ் நாட்டையே சூறையாடி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாங்கிக் குவித்துள்ள சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து, அந்தக் கும்பலைச் சிறையிலடைத்துக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்ற மக்களின் எண்ணத்தைத்தான் சட்டசபை தேர்தல் முடிவுகளும் அதைத் தொடர்ந்து வந்த மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து தேர்தல் முடிவுகளும் பிரதிபலித்து உள்ளன. இப்படிச் சொல்லித்தான் கருணாநிதி, மூப்பனார், சிதம்பரம் வகையறாக்கள் ஆட்சியுரிமை கோரிப் பெற்றார்கள்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளவர்கள், மக்களின் அந்த ஆணையை நிறைவேற்றுவதில் எந்த அளவு அக்கறையும் முனைப்பும் காட்டியுள்ளார்கள் என்பதைப் பரிசீலிப்பதற்கு கடந்த ஆறுமாத கால அவகாசமே போதுமானது. ஜெ.ஜெ.டி.வி ஒப்பந்தம், வெளிநாடுகளில் முதலீடுகள் செய்தது, வெளிநாட்டில் வாழும் இந்தியர் பெயரால் ஹவாலா பணம் கடத்தி வந்து உள்நாட்டில் சொத்துக்கள் வாங்கியது ஆகிய அந்நியச் செலாவணி மோசடி வழக்குகளுக்காக சசிகலா, அவரது அக்கா மகன்கள் தினகரன், பாஸ்கரன் மூவரும் ''காபிபோசா'' சட்டத்தின் கீழ் மத்திய அரசால் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். ஜெயாவும் சசியும் அடையாளம் தெரியாத நபரிடமிருந்து தலா 3 லட்சம் டாலர் வெளிநாட்டில் இருந்து அன்பளிப்பு வாங்கிய வழக்கில், ஆரம்பகாலத் தயக்கத்துக்குப் பிறகு சி.பி.ஐ. விசாரணையைத் துவக்கி உள்ளது.

ஜெயா - சசி கும்பலின் ஊழல் முறைகேடுகளை விசாரித்து, நேரடியாகவே வழக்குகள் தொடுப்பதற்கு தமிழக அரசு ஒரு குழு அமைத்தது. அது இந்திரகுமாரி, செல்வகணபதி, செங்கோட்டையன், மதுசூதனன், கு.ப. கிருஷ்ணன் ஆகிய முன்னாள் மந்திரிகள், சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கைது செய்து வழக்கும் போட்டுள்ளது. முன்னாள் மந்திரிகள், ஓரிரு எம்.எல்.ஏக்கள், அதிகாரிகளின் வீடுகள் சோதனையிடப்பட்டு சில சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் ஜெயாவும் அவரது அரசியல் குரு சோவும் வாதிடுவதைப் போல, ஜெயாவுக்குத் தெரியாமல் யாரோ சேர்த்த சொத்துக்கள் அல்ல. எல்லாம் ஜெயா - சசியின் பங்காளிகள், பினாமிகளுடையவைதான். விசாரணை - கைதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், சாட்சிகள், தடயங்களை அழிப்பதற்காகவும் ஜெயாவின் முன்னாள் வளர்ப்புப் பிராணி சுதாகரன், சசிகலாவின் கணவர் நடராஜன் போன்ற நெருங்கிய உறவினர்கள் அலைந்து திரிகின்றனர்.

எனினும் ஜெயா - சசி கும்பல் மீதான விசாரணைகளும், வழக்குகளும் நடக்கும் விதத்தையும் வேகத்தையும், சட்டத்திலும் நீதித்துறையிலும் உள்ள ஓட்டையையும் சிக்கலையும் பார்க்கும் போது, ஜெயா - சசி கும்பலின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, கடும் தண்டனைக்குள்ளாகும் என்று நம்புவதற்கான வாய்ப்பில்லை. முதலாவதாக, ஜெயா - சசி கும்பலுக்கு எதிரான நடவடிக்கையை முனைப்போடு நடத்துவதற்கான தார்மீக பலமும் உரிமையும் மத்திய, மாநில ஆட்சியாளர்களிடம் கிடையாது. குறிப்பாக இலஞ்ச - ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல் குற்றவாளிகளைக் கொண்டும், வெளியிலிருந்து அத்தகைய நபர்களின் ஆதரவாலும்தான் மத்திய ஆட்சி நடக்கிறது. அதன் கீழ் நீதித்துறையும் சி.பி.ஐ.யும் வழக்குகளை விசாரித்து வரும் யோக்கியதை கண்டு நாடே சிரிக்கிறது.

இரண்டாவதாக, யாரையும் விலை கொடுத்து வாங்கும் பணபலமிக்க ஜெயா - சசி கும்பலுக்கு ஐக்கிய முன்னணி, காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய மூன்று தரப்பிடமும், விஜய் மல்லையா, உடையார், அய்யங்கார், செட்டியார் குடும்பங்கள் போன்ற தரகு முதலாளிகளிடமும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முதல் மத்திய உளவுத் துறை, வருமான வரி மற்றும் அமலாக்கப் பிரிவு வரையும், நீதித்துறையிலும்கூட செல்வாக்கு உள்ளது. நான்காவதாக, சட்டத்திலும் நீதித்துறையிலும் உள்ள ஓட்டைகள், சிக்கல்கள், முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டிலேயே அதிக ஊதியம் பெறும் பிரபல வழக்கறிஞர்களை வைத்து வழக்குகளை இழுத்தடித்து முடக்கி விடுவதில் ஜெயா - சசி கும்பல் வெற்றி பெற்று வருகிறது. ஐந்தாவதாக, ஏற்கனவே ஆதிக்கம் வகித்து வந்த கவர்ச்சிவாத, பிழைப்புவாத, பொறுக்கி அரசியல், ஜெயா - சசி குடும்ப ஆட்சிக் காலத்தில் முழுவதும் கிரிமினல் மயமாகி விட்டது. மாநகரில் இருந்து கிராம மட்டம் வரைப் பரவி விரவியுள்ள கிரிமினல் வலைப் பின்னலின் ஆதரவு ஜெயா - சசி குடும்பத்திற்கு இருக்கிறது.

வழக்கறிஞர் விஜயன் தாக்கப்பட்ட வழக்கில் சதிகாரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, சதி விவரங்கள் அனைத்தும் கிட்டியபோதும் சாட்சியங்களைக் கலைத்து, பகைமையாக மாற்றுவதிலும், குற்றவாளிகள் அனைவருக்கும் விடுதலை

... 22-ம் பக்கம் பார்க்க

www.padippakam.com

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, தனியார்மயம் - தாராளமயமாக்கலை எதிர்த்து சவடால் அடித்து வந்த போலிக் கம்யூனிஸ்டுகள், இப்போது அதையும் கைவிட்டு வெறும் முணுமுணுப்போடு அடங்கிப் போய்விட்டார்கள். வகுப்புவாத சக்திகளின் அபாயத்தை முறியடிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, ஐ.மு. அரசை உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் விமர்சனத்தோடு ஆதரிக்கத் தொடங்கிய போலிகள், இன்று ஐ.மு. அரசின் அங்கமாக மாறி திறுவனமயமாகி விட்டார்கள். மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றப் போவதாக மாய்மாலம் செய்து வந்த ஐ.மு. அரசு, காங்கிரசின் கேடுகெட்ட கொள்கைகளையே தொடர்ந்து பின்பற்றி வருவதோடு, அதையே தீவிரப்படுத்தவும் கிளம்பிவிட்டது. இக்கொள்கைகளை எதிர்ப்பதாக வீர வசனம் பேசும் போலிக் கம்யூனிஸ்டுகளின் தலையில் ஏறி மிளகாய் அரைத்த பின்னரும்கூட, "ஐயோ! எங்களைப் போராட்டத்திற்கு நிர்ப்பந்திக்காதீர்கள்!" என்று முனகுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாமல் போலிகள் முடமாகிக் கிடக்கிறார்கள்.

## மரக்குதிரை மீதேறிக் கொண்டு புரட்சிப் பயணம் செய்யும் போலிகள்

ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களுக்குள்ளாகவே, ஐ.மு. அரசு, அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பதற்கான கமிஷன் (DISINVESTMENT COMMISSION) ஒன்றை அமைத்துள்ளது. இக்கமிஷனிடம் லாபம் தரக்கூடிய 40 அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்க இப்போது பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் இந்திய எஃகு ஆணையம் (SAIL), இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC), விதேஷ் சன்சார் நிகாம் லிமிடெட் (VSNL), எண்ணெய் எரிவாயு கமிஷன் (ONGC), மகா நகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (MNTL) முதலான மிகப் பெரிய நிறுவனங்களும் அடங்கும். இவை நல்ல நிலையில் இயங்கி கோடிக்கணக்கில் லாபம் ஈட்டி வரும் நிறுவனங்களாகும்.

இவை தவிர, ஏர் இந்தியா, சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் (ITDC), இந்திய கப்பல் கழகம் (SCI), இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம், இந்திய டெலிபோன் தொழிற்கழகம் (ITI), தேசிய அனல்மின் கழகம் (NTPC) ஆகியன ஏற்கனவே பங்கு விற்பனை பரிசீலனைக் கமிஷனிடம் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டு, அக்கமிஷனும் இப்போது ஒப்புதல் அளித்து விட்டது. தற்போதைய முதற் கட்டத்தில் - இவ்வாண்டில் மட்டும் அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்பதன்மூலம் ரூ.5000 கோடி திரட்ட முடியும் என்று நிதியமைச்சகம் எதிர்பார்க்கிறது. பெரு முதலாளிகளும் அவர்களது பத்திரிகைகளும், "துணிச்சலான - தைரியமான நடவடிக்கை" என்று ஐ.மு. அரசை பாராட்டுகின்றன.

தொழிலாளர்களின் தோழனாகக் கூறிகொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகள் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பார்களா? 'கடும்' எதிர்ப்பு தெரிவித்தார்கள். எப்படித் தெரியுமா? "லாபம் தரும் அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பது மக்கள் விரோதமானது. பங்கு விற்பனைக்கான பரிசீலனைக் கமிஷன் என்பது தனியார்மயமாக்கலுக்கான ஒரு கருவி. ஐ.மு. அரசுக்கு வழிகாட்டும் கொள்கையான குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் இத்தகைய நடவடிக்கைகளுக்கு உரிமை தரப்படவில்லை. ஐ.மு. அரசு இத்தகைய போக்கை கைவிட வேண்டும். இல்லையேல் நாங்கள் போராட நிர்ப்பந்திக்கப் படுவோம்" என்று முழங்கினார் வலது கம்யூனிஸ்டுத் தலைவரான பரதன். "ஐ.மு. அரசு தனது தனியார்மய-தாராளமயக் கொள்கையைக் கைவிடவேண்டும். இல்லையேல் இடதுசாரி சங்கங்கள் போராட்டத்தில் இறங்க நேரிடும்" என்று எச்சரித்தார், 'மார்க்சிஸ்டு' தலைவர்களில் ஒருவரான பிரகாஷ் கரத்.

ஆனால் போலிக் கம்யூனிஸ்டுகளின் இந்த "உதார்"களை ஐ.மு. அரசு ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. தனியார்மய-தாராளமயமாக்கலை முன்னிலும் தீவிரமாக செயல்படுத்தக் கிளம்பிவிட்டது. அண்மையில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பங்குகளை ஐரோப்பிய நாடுகளில் 50 கோடி டாலர் அளவுக்கு (ஏறத்தாழ 1500 கோடி ரூபாய்) விற்பனை செய்ய நிதியமைச்சகம் அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த ஐரோப்பிய விற்பனை (Euro-issue) மூலம் அன்னிய முதலீட்டாளர்கள் ஸ்டேட் பாங்கின் 34% பங்குகளைக் கைப்பற்றி விடுவர். அதன்பிறகு அது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவாக இருக்காது; ஸ்டேட் பாங்க் ஆப் ஐரோப்பாவாக மாறிவிடும்.

இதுமட்டுமல்ல; ஸ்டார் டி.வி.யின் அதிபரான ராபர்ட் மர்டோக் ஐ.மு. அரசின் காபினெட் அமைச்சர்களை அடிக்கடி சந்திக்கிறார். ஸ்டார் டி.வி.யை இந்தியமயமாக்கும் நடவடிக்கைகள் திரைமறைவில் நடக்கின்றன. "இடதுசாரி கட்சிகள் அவ்வப்போது எங்கள் மீது கடுமையான விமர்சனங்களை வைக்கின்றன. ஆனால் எங்களது அமைச்சரவை முடிவைச் செயல்படுத்துவதை யாராலும் தடுக்க முடியாது" என்று சவால் விடுக்கிறார் நிதியமைச்சர் ப. சிதம்பரம். அடுத்து வரும் பட்ஜெட்டில் மிக அதிகமாக தனியார்மய - தாராளமய திட்டங்கள் இருக்கும் என்று வெளிப்படையாகவே பேட்டியளிக்கிறார். தொழிலமைச்சர் முரசொலி மாறனோ, அன்னிய முதலீட்டு தொழிற் திட்டங்களை அதிவேகமாக அங்கீகரித்து வருகிறார். பல பெருந்தொழில் நிறுவனங்களுக்கு இனி உரிமம் பெறத் தேவையில்லை என நடைமுறைப்படுத்துவது பற்றி பரிசீலித்து வருவதாகக் கூறுகிறார். அன்னிய மூலதனக் கொள்ளைக்கு கதவை அகலத் திறப்பதைத் தவிர இதற்கு வேறு பொருள் இல்லை. இது தவிர, கனிம-சுரங்கத் தொழில், ஆழ்கடல் எண்ணெய் வள ஆய்வுத் தொழில், வங்கி-ஆயுள் காப்பீடு ஆகியவற்றிலும் அன்னிய மூலதன ஆதிக்கத்தை அனுமதிப்பதற்கான முயற்சிகள் வேகமாக நடக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, வடிவுரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஐ.மு. அரசு உத்தேசித்து வருகிறது. உற்பத்திப் பொருளுக்குத்தான் தற்போது வடிவுரிமைச் சட்டம் உள்ளது. ஆனால் ஐ.மு. அரசு, உற்பத்திப் பொருளின் குறிப்பிட்ட செய்முறைக்கும் (Process) வடிவுரிமை பெறும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வர முயற்சிக்கிறது. உதாரணமாக, ஆஸ்பிரின் என்ற வலி நிவாரணிக்குத்தான் வடிவுரிமை உள்ளது. இந்த ஆஸ்பிரினைக் கொண்டு பல்வேறு செய்முறைகளில் வேறுபட்ட வலி நிவாரணிகளைத் தயாரிக்கலாம். இச் செய்முறைகளுக்கு தனியாக வடிவுரிமை இதுவரை கிடையாது. செய்முறைக்குமான வடிவுரிமைச் சட்டத்தை இந்தியா ஏற்குமானால், இனி இந்தியாவில் ஆஸ்பிரின் மருந்தை எந்த வகையிலும் உற்பத்தி செய்ய முடியாமல் போய்விடும். ஏனெனில் அமெரிக்காவிலுள்ள ஒருவர் அச்செய்முறைக்கு வடிவுரிமை பெற்றவராக இருப்பார். இதனால் மருந்துப் பொருள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு, மருந்து விலைகள் பல மடங்கு உயர்ந்து விடும்.

இதுதவிர, உலக வர்த்தகக் கழகத்தின் (WTO) நிர்ப்பந்தம் காரணமாக, "காட்" ஒப்பந்தத்தின் 18வது விதியை ஏற்று கையெழுத்திட ஐ.மு. அரசு உத்தேசித்து வருகிறது. அவ்வாறு கையெழுத்திட்டு விட்டால், பின்னர் உலக வர்த்தகக் கழகத்தின் விருப்பங்கள்-நோக்கங்களின்படியே இந்தியாவின் ஏற்றுமதி-இறக்குமதி நடக்கும். இதன் விளைவாக, இந்தியப் பொருளாதாரம் மீளமுடியாத நெருக்கடியில் சிக்கிவிடும்.

இத்தனைக்கும் பிறகும் போலிகள் கூறுவதென்ன? "வடிவுரிமைச் சட்டத் திருத்தத்தை அனுமதிக்கவே கூடாது; அரசுத் துறை பங்குகளை விற்கக்கூடாது; அரசுத் துறைகளை நவீனப்படுத்த வேண்டும்.



படிப்பகம்

நலிவடைந்த ஆலைகளை அரசும் தனியாரும் பங்கேற்கும் கூட்டுத் துறையாக மாற்றலாம். அன்னிய மூலதனத்தை திறமையாகப் பயன்படுத்தக் கூடிய துறைகளில் முதலீடு செய்யலாம். ஆனால் நுகர்பொருள் துறையிலும், வங்கி-இன்சூரன்சு முதலான நிதித் துறையிலும் அன்னிய முதலீடுகளை அறவே அனுமதிக்கக் கூடாது" என்று உபதேசிக்கிறார், 'மார்க்சிஸ்டு' கட்சிப் பிரமுகரான பிரகாஷ் கரத். "பொருளாதார சீர்திருத்தங்கள் தேவைதான். அவை நாட்டின் வளர்ச்சிக்கானதாக அமைய வேண்டும். ஆனால் ராவ் அரசும், ஐ.மு. அரசும் அந்தத் திசையில் செல்லவில்லை" என்கிறார் பரதன். அப்புறம் எதற்காக இந்த அரசில் வலதுகள் பங்கேற்கிறார்கள்? 'இடது'கள் எதற்காக வெளியிலிருந்து ஆதரிக்கிறார்கள் என்று தெரியவில்லை. நாட்டை மறுகாலனியாக்கும் பாதையில் நாலுகால் பாய்ச்சலில் ஐ.மு. அரசு முன்னேறிக் கொண்டிருக்கும்போது, வழிகாட்டும் குழுவைக் (Steering Committee) கூட்டி, இத்தகைய தாராளமய நடவடிக்கைகளைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மத்தியில் சிறுபான்மை' ஐ.மு. அரசு அமைந்தவுடன், தங்களது ஆலோசனை-வழிகாட்டலின்படியே மத்திய அரசு செயல்படுவதாகவும், ஐ.மு. அரசின் வழிகாட்டும் கொள்கையான குறைந்த பட்ச பொதுத் திட்டத்தை தாங்கள்தான் வகுத்ததாகவும் போலிக் கம்யூனிஸ்டுகள் மக்களிடம் பிரமையூட்டி வந்தனர். தாங்கள் அங்கம் வகிக்கும் வழிகாட்டும் குழுவில் (Steering Committee) கொள்கை முடிவுகள் எடுத்த பின்னர்தான், மத்திய அமைச்சரவை கூட்டப்பட்டு திட்டங்கள் செயலாக்கப்படுவதாகவும் தமது அணிகளை நம்ப வைத்தனர். ஆனால் ஐ.மு. அரசின் குறைந்தபட்ச பொதுத் திட்டம் என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான் என்று இப்போது நிருபணமாகிவிட்டது. ஆட்டுக்குத் தாடி இருப்பதுபோல, போலிகள் ஐ.மு. அரசில் ஒட்டிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதற்குமேல் வேறெந்த முக்கியத்துவமும் அவர்களுக்கு இல்லை என்று அம்பலமாகி விட்டது.

நாளை ஒருவேளை போலிக் கம்யூனிஸ்டுகள் ஐ.மு. அரசை ஆதரிக்காவிட்டாலும் அது கவிழ்ந்து விடாது. ஏனெனில், எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி, ஆளும் வர்க்கங்களும் இச்சிறுபான்மை அரசைக் கவிழ்த்து இன்னுமொரு குதிரை மீது பந்தயம் கட்ட இன்று தயாராக இல்லை. மேலும் காஷ்மீரின் தேசிய மாநாட்டுக் கட்சி, கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவற்றோடு காங்கிரசையும் ஐ.மு. அரசில் சேர்த்துக் கொள்ள தேவகௌடா ரகசிய பேரங்கள் நடத்தி வருகிறார். மேலும் தனியார்மய-தாராளமயக் கொள்கைகளுக்கு மாற்றான கொள்கை என்று போலிகளிடம் எதுவும் கிடையாது. காங்கிரசு-ஐ.மு. அரசின் அதே கொள்கைகளைத்தான் தாங்கள் ஆளும் மாநிலங்களிலும் விசுவாசமாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் ஐ.மு. அரசின் கொள்கைகளை எதிர்த்து, தமது ஆதரவை போலிகள் விலக்கிக் கொண்டால் மேலும் தனிமைப்பட நேரிடும் என்பதால், பெயரளவிலான எதிர்ப்பைக் காட்டி முணுமுணுப்பதைத் தவிர போலிகளுக்கு வேறு வழியில்லை. பொருளாதாரவாதப் புதைசேற்றில் மூழ்கிப் போய்விட்ட அதன் தொழிற்சங்கங்களைக் கொண்டு, தனியார்மய-தாராளமய எதிர்ப்புப் போராட்டங்களைக் கூட நடத்த சாத்தியமில்லை. ஆனாலும் தாங்கள் ஏதோ மிகப் பெரிய சக்தியாக இருப்பதாக 'பாவ்லா' காட்டிவரும் போலிகள், கோவணத்தை அவிழ்த்து தலைப் பாகை கட்டிக்கொண்டு 'புரட்சி' நடை போட்டு வருகிறார்கள்.

• குமார்



## தொ.பி.கு.வின் போராட்டத்தால் ஒளி பிறந்தது!

இந்தியாவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் இடங்களுள் குறிப்பிடத்தக்கது நெய்வேலி நகரம். விளக்கின் அடியிலே இருட்டுதான் எனக் கூறுவார்களே அதுபோல நெய்வேலி நகரத்தில் தாண்டவன் குப்பம், திடீர் குப்பம், வட்டம் 21 பகுதிகள் பலகாலமாகவே தெரு விளக்குகள்கூட இன்றி, இரவே அஞ்சும் வண்ணம் இருண்டு கிடந்தன. இப்பகுதிகளில் வாழும் 10,000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் வீடுகளிலும் மின் இணைப்பு வசதி கிடையாது. நாட்டிற்கு மின்சாரம் தரும் அந்த ஒப்பந்த தொழிலாளர்கள் வெளிச்சத்திற்கு மண்ணெண்ணெய் விளக்குகளை நம்பிக் கிடந்தனர். சாக்கடை-கழிப்பிட வசதி, குடிநீர் இணைப்பு என எந்தவொரு வசதியுமின்றி, பன்றிப்பட்டிகளைப் போலக் கிடந்து வந்தன அந்தப் பகுதிகள். இச்சுகாதார கேட்டிற்கு எதிராகத் தொழிலாளர்கள் மத்தியில் சிறு முணுமுணுப்பு தோன்றினாலும், நெய்வேலி நிலக்கரி நிர்வாகம், "ஆக்கிரமிப்பு எனச் சொல்லி அனைத்து வீடுகளையும் இடித்துத் தள்ளிவிடுவோம்" என மிரட்டி வந்தது.

தொழிலாளர் பிரச்சாரக் குழு (தொ.பி.கு.), அம்மக்களைத் திரட்டி, அடிப்படை சுகாதார வசதியும், அனைத்து வீடுகளுக்கும் ஒரு மின் விளக்கு தரக் கோரியும் 17.10.96 அன்று நெய்வேலி நகர நிர்வாக அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியது. 250-க்கும் மேற்பட்ட மக்கள் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டுக் கொண்டிருந்தபோதும் எந்தவொரு அதிகாரியும் வெளியே வந்து ஏனென்று கேட்கவில்லை.

இந்த அதிகார வர்க்கத் திமிருக்குப் பாடம் புகட்டும்முகமாக தொ.பி.கு. தோழர்கள் அலுவலகத்தின் கதவை வெளிப்பக்கமாகப் பூட்டிவிட்டனர். போராட்டத்தைச் சீருலைக்க ஒரு ரௌடியை அனுப்பி சலசலப்பை ஏற்படுத்த போலீசார் செய்த முயற்சியையும் தோழர்கள் முறியடித்தனர். இதன்பின்தான் கலியபெருமாள் என்ற அதிகாரியை பேச்சுவார்த்தைக்கு அனுப்பியது நிர்வாகம்.

பேச்சுவார்த்தைக்குப் பின் குப்பைகளை அகற்றி, மின்விளக்கு-குடிநீர் இணைப்பு வசதிகளை செய்து கொடுத்துள்ளது நிர்வாகம். சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

தகவல்:
தொ.பி.கு., நெய்வேலி.

www.padippakam.com

## கேரளா:

# மலைவாழ் மக்களின் நிலங்கள் அபகரிப்பு சீர்திருத்தங்களின் யோக்கியதை

அக்டோபர் 4. காலை 11 மணிக்கு கேரள மாநிலம் பாலக்காடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள் சென்ற 4 இளைஞர்கள், ஆட்சியரை துப்பாக்கி முனையில் பணயக் கைதியாக்கினர். அங்கு வர முயன்ற பிற ஊழியர்களை வெடிகுண்டு வீசி விரட்டினர்.

''மலைவாழ் மக்களின் நிலங்களைப் பறிக்கும் புதிய சட்டத் திருத்தத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்; அந்நியர்களால் அபகரிக்கப்பட்ட நிலங்களை மலைவாழ் மக்களிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும்; மலைவாழ் மக்கள் மீதான அடக்குமுறைகளைப் பற்றி தனி நீதிமன்றம் மூலம் விசாரணை செய்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்'' என்ற கோரிக்கையுடன் 9 மணி நேரம் அவர்கள் மாவட்ட ஆட்சியரைப் பணயக் கைதியாக்கினர்.

இக் கோரிக்கைகளை அரசிடம் வலியுறுத்துவதாகவும், இந்த 4 இளைஞர்கள் மீது எந்த வழக்கும் போடமாட்டோம் என்று அதிகார வர்க்கமும் போலீசும் உறுதி அளித்த பின்னர், அவர்கள் மாவட்ட ஆட்சியரை விடுவித்து, தப்பியோடி தலைமறைவாகி விட்டனர். இந்த 'இடது முன்னணி' அரசு மக்களுக்கு எதிரானது என்று காட்டுவதற்காக, பொம்மைத் துப்பாக்கி, பிளாஸ்டிக் பந்துகள், குழாய்கள், பழைய பேட்டரி, மின்சார ஒயர்கள் ஆகியவற்றை வைத்து தாங்கள் இப்படியொரு நாடகம் நடத்தியதாகக் கூறி, அவற்றை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே பத்திரிகையாளர் முன் வீசியெறிந்துவிட்டுச் சென்றனர்.



பொம்மை துப்பாக்கி, பிளாஸ்டிக் பந்துகளைக் கொண்டு மாவட்ட ஆட்சியரைச் சிறைப்படுத்திய அய்யங்காளிப் படையினர்

* * * *

மலைவாழ் மக்களின் காடுகளை ஆக்கிரமித்த பிறர், காடுகளை வெட்டி வீடுகள், கட்டிடங்கள் கட்டியும், விளைநிலமாக்கியும் வாழ்கின்றனர். மலைவாழ் மக்களோ தமது காடுகளை இழந்து, வாழ்வை இழந்து பஞ்சைபராரிகளாக பரிதவிக்கின்றனர். நாடு முழுதும் மலைவாழ் மக்களின் வாழ்வு பறிபோனதைப் போலவே கேரளாவிலும் நடந்தது.

1975-ம் ஆண்டு கேரள சட்டமன்றத்தில் மலைவாழ் மக்களின் காடுகள், நிலங்களை அவர்களிடமே ஒப்படைக்க ஒரு சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மலைவாழ் மக்களல்லாதவர்கள் 1960க்குப் பின் நிலங்களை வாங்கியிருப்பினும் அது செல்லாது என சட்டம் கூறியது. இதை நடைமுறைப்படுத்தினால் மலைவாழ் அல்லாத மக்களிடம் ஓட்டுக் கிடைக்காமற் போகும் எனப் பயந்த ஓட்டுப் பொறுக்கிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தாது கிடப்பில் போட்டனர்.

காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும் மாறி மாறி ஆட்சியமைத்தும் இன்று வரை பிரச்சினையைத் தீர்க்கவில்லை.

1987ம் ஆண்டு தேர்தலுக்கு முன்னதாக ஆட்சியிலிருந்த காங்கிரசு கட்சி 1975ம் ஆண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கூறியது. ஆனால், 1960ம் ஆண்டுக்குப் பதிலாக 1982ம் ஆண்டில் காங்கிரசு பதவியேற்ற நாளிலிருந்து மலைவாழ் மக்கள் அல்லாதவர்கள் மலைவாழ் மக்களிடமிருந்து நிலங்களை வாங்கியது செல்லாது என்றே அரசாணை வெளியிட்டது.

'87 தேர்தலில் காங்கிரசு தோற்று, போலி கம்யூனிஸ்டுகள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி சட்டத்தை மீண்டும் கிடப்பில் போட்டனர். மலைவாழ் மக்களின் பறிபோன வாழ்வை இந்த போலி கம்யூனிஸ்டுகள் மீட்டெடுக்கவில்லை. அந்த அளவு பதவி நாற்காலி சுகத்தில் மூழ்கியுள்ளனர்.

1988ல் மலைவாழ் மக்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். உயர் நீதிமன்றம் 1993ல் தீர்ப்பு வழங்கியது. காங்கிரசு கட்சி கால அவகாசம் வேண்டும் என இழுத்தடித்து, '96 தேர்தலில் பதவியையும் இழந்தது. திரும்ப போலி கம்யூனிஸ்டுகளின் ஆட்சி வந்தது.

உயர் நீதிமன்றம் கறாராக இவ்வாண்டு செப்டம்பர் 30க்குள் மலைவாழ் மக்களின் நிலங்கள் திருப்பித் தரவேண்டும் என கெடு விதித்தது. அங்கு குடியேறிய மக்களுக்கு நட்ட ஈடு தருவதெனில் சுமார் மூன்றே கால் கோடி ரூபாய் செலவாகும் என சொல்லிப் பார்த்தும், உயர் நீதிமன்றம் ஏற்க மறுத்து, ''என்ன செய்வீர்களோ தெரியாது, செப்டம்பர் 30க்குள் மலைவாழ் மக்களுக்குரிய நிலங்கள் திரும்பச் சேர வேண்டும்'' என கெடு விதித்தது.

போலி கம்யூனிஸ்டுகள் பார்த்தார்கள். உடனே சட்டமன்றத்தில் ஒரு சட்ட திருத்தம் கொண்டு வந்தனர்.

1) 1975 சட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது. தவிர சட்டம் '75ல் இயற்றப்பட்டாலும் அரசாணை 1987ல்தான் வெளியிடப்பட்டது. எனவே அதன்படிதான் நடைமுறைப்படுத்துவோம்.

2) இத்திருத்தப்படி, 1960லிருந்து மலைவாழ் மக்களின் நிலத்தைப் பறித்தவர்கள் அல்ல, மாறாக 1982க்குப் பின் நிலங்களை வாங்கியவர்களிடமிருந்துதான் மலைவாழ் மக்களின் நிலங்கள் மீட்டெடுக்கப்படும்.

3) மலைவாழ் மக்களுக்கு நிலம் தருவதோடு நட்ட ஈடாக ரூ.25,000 தருவோம்.



படிப்பகம்

www.padippakam.com

4) நிலத்தை பெறுவதில் சிக்கலிருப்பின் அதற்கு மாற்றாக கூடுதல் நிலத்தை அரசே தரும்.

மேலோட்டமாகப் பார்த்தால் மலைவாழ் மக்களுக்கு கூடுதல் சலுகை போலத் தெரியும். போலி கம்யூனிஸ்டுகளின் நய வஞ்சகம் எவ்வளவு கேடுகெட்டதெனப் பாருங்கள்.

1) மலைவாழ் மக்களின் நிலங்கள் வாங்கியது 1960 லிருந்தே செல்லாது என 1975ல் சட்டமியற்றியுள்ளனர். அதன்பின் 1982 லிருந்து யாராவது நிலம் வாங்குவார்களா?

2) ஏதோ தெரியாத்தனமாக ஒருசிலர் நிலம் வாங்கியிருக்கலாம். எனவே நிலம் மீட்டுத் தருவது. அதற்கு நட்ட ஈடு, கூடுதல் நிலம் என்பதெல்லாம் அப்பட்டமான ஏமாற்று.

> மலைவாழ் மக்களிடம் நிலங்களைத் திரும்ப ஒப்படைக்கும் நடவடிக்கையை கிடப்பில் போட்டு விட்டு, தீவிர வாதத்தை ஒழிப்பதே முதற் பணி எனப் பீதியூட்டி வருகின்றனர் 'மார்க்சிஸ்டு'கள்.

3) போலி கம்யூனிஸ்டுகளின் இந்த சட்ட திருத்தம் மூலம் 1960லிருந்து ஒரு கட்டு புகையிலைக்கும், மிரட்டலுக்கும் நிலத்தை அபகரித்தவர்களுக்கு அரசே சட்டபூர்வ உடமையாக்கிவிட்டது என்பது தான் உண்மை.

4) காடுகளை அழித்து சுற்றுச்சூழலை மாசுபடுத்தியது மட்டுமின்றி, மலைவாழ் மக்களை ஒட்டாண்டியாக்கிய குற்றவாளிகளுக்கு அரசே பாதுகாப்புமளிக்கிறது.

எனவே இந்த சட்டதிருத்தத்தை உடனடியாக நீக்க வேண்டும், மலைவாழ் மக்களின் நிலங்கள் 1975 சட்டப்படி திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் எனக் கோரி கலெக்டரை பணயக் கைதியாக்கினர் 'அய்யங்காளி படை' என்ற அமைப்பினர். இவர்கள் தங்களை மா-லெ குழு எனவும் கூறுகின்றனர்.

இவர்களது சாகசவாத நடவடிக்கையால், போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து ஓட்டுக் கட்சிகளின் துரோகமும் இன்று நாடெங்கும் அம்பலப்பட்டுப் போயுள்ளது. இதனால் ஆத்திரமடைந்துள்ள ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள், இவர்களது படங்களை நாளிதழ்களில் வெளியிட்டு இவர்களைப் பற்றி தகவல் தந்தால் பரிசளிப்போம் என்று அறிவித்து, மாநிலமெங்கும் தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றனர். மலைவாழ் மக்களிடம் நிலங்களைத் திரும்ப ஒப்படைக்கும் நடவடிக்கையைக் கிடப்பில் போட்டு விட்டு, தீவிரவாதத்தை ஒழிப்பதே முதற் பணி என்று பீதியூட்டி வருகின்றனர்.

● நாகராசன்

# ஈழ அகதிகளின் அவதி
# மு.க.வின் நீலிக்கண்ணீர்

"சத் ஜெய" இராணுவ நடவடிக்கையின் மூன்றாவது கட்டத்தில், கிளிநொச்சி நகரைப் புலிகளிடமிருந்து கைப்பற்றியது சிங்கள இராணுவம். சொந்த நாட்டு மக்களின் மீதே விமான - பீரங்கி குண்டுகளை வீசியும், உணவும் - குடிநீரும் வழங்குவதைத் தடை செய்து, ஈழத்தமிழர்களைப் பட்டினி - படுகுழிக்குள் தள்ளியும் தான் சிங்கள இன வெறியர்கள் இவ்வெற்றியைச் சாதித்துள்ளனர்.

கிளிநொச்சி தாக்குதலின் பொழுது விமானங்களும், பீரங்கிகளும் குண்டு மழை பொழிந்தபடி முன் செல்ல, சிங்கள இராணுவம் பதுங்கி பதுங்கி முன்னேறியது. ஜூலை மாத இறுதி தொடங்கி செப்டம்பர் இறுதிவரை நடந்த இந்த இராணுவ நடவடிக்கையால், ஏறத்தாழ இரண்டு லட்சம் ஈழத்தமிழர்கள் தங்களது சொந்த மண்ணில் இருந்து வேரோடு பிடுங்கியெறியப்பட்டனர்; இன்று அவர்கள் நாடோடிகளைப் போல நெடுஞ்சாலை ஓரங்களிலும், காட்டினுள்ளும் தஞ்சம் புகுந்து ஜீவ மரணப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

"சத் ஜெயு" இராணுவ நடவடிக்கையின் தொடக்கத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததால், கிளிநொச்சி பகுதிக்கு உணவுப் பொருளும், குடிநீரும் வழங்குவதைத் தடை செய்தது சந்திரிகா அரசு. சமாதான விரும்பியாக நாடகமாடி வரும் சந்திரிகா, மக்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளிய இந்தத் தடையை, "தற்காலிகமான நடவடிக்கை" என நியாயப்படுத்தினார்.

இத்தடை காரணமாக அப்பகுதியில், "ஒரு கிலோ சாதாரண குத்தல் அரிசி 35 ரூபாய்; ஒரு கிலோ அரிசி மாவு ரூ. 40; ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ரூ. 70/-" என அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்தன.

உயிரைக் காத்துக் கொள்ள ஓடித் திரியும் அம்மக்களிடம், உடலோடு ஒட்டியிருக்கும் ஆடையைத் தவிர வேறென்ன இருக்க முடியும்? அச்சமயத்தில் அவர்கள் சேறும் சகதியும் நிறைந்து கலங்கிப் போன தண்ணீரைக் குடித்து உயிர் பிழைத்துள்ளனர். ஜூலை 18-ந் தேதி போட்ட இந்த தடையை ஆகஸ்டு 12-ல் ஓரளவு நீக்கி, சில லாரி உணவுப் பொருட்களை கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்தது சந்திரிகா அரசு. ஆனாலும் சிங்கள இராணுவம் இதிலேயும் மண் அள்ளிப் போட்டது. "உணவுப் பொருட்கள் வாங்க வந்த மக்களின் பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை" எனக் கூறி சிங்கள இராணுவம் அவர்களைத் துரத்தியடித்தது.

தமிழகத்தில் அகதியாகத் தஞ்சமடைந்துள்ள அருமத்துரை என்ற ஈழத்தமிழர், "கண்ணில்படும் இடமெல்லாம் பிணக் குவியல்தான்; குண்டு துளைத்தும், நோயாலும் எத்துணை பேர் இறந்து போனார்கள் என்பதே தெரியாது" என இக்கோரத்தை மனம் வெதும்பிக் கூறுகிறார்.

கிளிநொச்சி தாக்குதல் தொடங்கிய பின், கிட்டத்தட்ட 3000 ஈழத்தமிழர்கள் தமிழகத்தை வந்தடைந்துள்ளனர். "இவர்

ஈழத் தமிழ் இளைஞர்களைத் தேடி வேட்டையாட கல்லூரியில் புகும் சிங்கள இராணுவம்



www.padippakam.com



**சிங்கள இராணுவத்திடமிருந்து தப்பி வரும் ஈழத் தமிழர்களை விசாரணை என்ற பெயரில் வேட்டையாட தமிழக அரசின் 'க்யூ' பிரிவு போலீசும், இந்தியக் கப்பற்படையும் தயாராக உள்ளன.**

கள் அனைவருமே புலிகளின் ஆதரவாளர்கள்'' என வீண்பழி சுமத்தி வருகிறார், சிறீலங்காவின் துணை இராணுவ மந்திரி அனுருத்த ரத்வத்தே. ''புலிகளின் ஈவிரக்கமற்ற தாக்குதலால் தான் அகதிகள் தமிழகம் நோக்கி வரத் தொடங்கியுள்ளதாக'' சோ போன்ற ஈழத் தமிழர் விரோதிகளும் நஞ்சைக் கக்கத் தொடங்கியுள்ளனர்.

ஈழத் தமிழ் அகதிகளைப் பொருத்தமட்டில் இது உண்மைக்குப் புறம்பானது மட்டுமல்ல; இன்றைய அவர்களின் நிலை பரிதாபம் நிறைந்ததுமாகும். கடந்த ஜூலை 31 தொடங்கி ஆகஸ்ட் 21-ந் தேதி முடிய 799 ஈழத் தமிழர்கள் தமிழகம் வந்துள்ளனர். இவர்களுள் பலர், சிங்கள அரசு நடத்தி வரும் பேசாலை அகதிகள் முகாமில் இருந்து தப்பி வந்தவர்கள்; 1994-ம் ஆண்டில் இலங்கையில் அமைதி திரும்பி விட்டதாகக் கூறி, தமிழக அரசு திருப்பி அனுப்பிய அகதிகளை இப்பேசாலை முகாமில் தங்க வைத்தது இலங்கை அரசு.

புலிகள் தாக்கிச் சென்ற பின்னர், இந்த அகதி முகாமிலுள்ள இளைஞர்களைப் பிடித்துச் செல்லும் சிங்கள இராணுவம், அவ்விளைஞர்களை சித்தரவதை செய்து கொன்று விடுகிறது. சிங்கள இராணுவத்திற்குப் பயந்து ஆண்கள் காடுகளில் சென்று மறைந்து கொண்டால், முகாமிலுள்ள பெண்களை அடித்து உதைத்து, பாலியல் வன்முறையை ஏவிவிடுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளது சிங்கள இர்ராணுவம். சிங்கள இராணுவத்திற்குப் பயந்து இன்று மீண்டும் தமிழகம் வந்துள்ள இவர்களின் வாழ்க்கை, சுவற்றை நோக்கி வீசியெறிந்த பந்தைப் போலாகிவிட்டது.

கடந்த 15.8.96 அன்று, மட்டக்கிளப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 20 கிராமங்களைச் சேர்ந்த மக்கள், புலிகளின் முகாமில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தள்ளிப் போய் விடும்படி எச்சரிக்கப்பட்டனர். இதை எதிர்த்து அக் கிராமங்களைச் சேர்ந்த எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களும், மாணவர்களும் தன்னெழுச்சியாகப் போராட்டத்தில் குதித்தனர். இது தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் இராணுவத்தின் கரங்களில் உள்ளதால், இந்த 20 கிராமங்களும் இன்று அழிவின் விளிம்பில் உள்ளன. ''இப்படி ஈழத் தமிழர்களின் கிராமங்கள் அடுத்தடுத்து ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டு வருவதால்தான், தமிழகம் நோக்கி வருவதாகக் கூறுகின்றனர்'' ஈழத் தமிழர்கள்.

தமிழர் குடியிருப்புகள்ளை அழிப்பதோடு மட்டும் சிங்கள இராணுவத்தின் இனவெறி அடங்கி விடவில்லை. இருபத்தைந்து வயதுக்குள்ளான இளம் தமிழ் பெண்கள் பகிரங்கமாகவே சிங்கள இராணுவத்தால் தூக்கிச் செல்லப்படுகின்றனர்; போரில் காயமடைந்த சிங்கள இராணுவ வீரர்களுக்குத் தேவைப்படும் இரத்தம், சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பெறப்படுகிறது. சிங்கள இராணுவத்திலுள்ள இளைஞர்களையும் - யுவதிகளையும் திருமணம் செய்து கொள்ள ஈழத் தமிழ் இளைஞர்கள் - பெண்களும் கட்டாயப் படுத்தப் படுகின்றனர். செஞ்சிலுவைச் சங்கம் தமிழர் பகுதிகளில் இயங்க அனுமதிக்கப்படுவதில்லை. வெளிச்சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை குறிப்பிட்ட அளவிற்கு மேல் வாங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் ஈழத் தமிழ் மக்களுக்கு உயிரையும் மானத்தையும் காத்துக் கொள்ள தமிழகத்திற்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை.

அதே பொழுதில், நினைத்தவுடனேயே ஈழத் தமிழர்கள் தமிழகத்திற்கு தப்பி வந்துவிட முடியாது. சிங்கள கடற்படையின் கெடுபிடிகள் ஒருபுறமிருக்க, குறைந்த பட்சம் பத்தாயிரம் ரூபாய் பணமிருந்தால் தான், தமிழகத்திற்கு தப்பி வருவதை ஒருவர் நினைத்துக் கூடப் பார்க்க முடியும். செப்டம்பர் 7-ந் தேதி இலங்கையிலுள்ள நாச்சிக்குடாவில் இருந்து தப்பி வந்த 58 ஈழத் தமிழர்கள், ''தாங்கள் தப்பி வருவதற்கு 2,20,000 ரூபாய் செலவு செய்ததாக''த் தெரிவித்தனர். இந்நிலையில், எல்லாவித உடமைகளையும் பறிகொடுத்து விட்டு, காடுகளிலும் - நெடுஞ்சாலை ஓரங்களிலும் தஞ்சமடைந்திருக்கும் 2 லட்சம் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற, ''தமிழக அரசு இலவச படகு போக்குவரத்தினை செய்து தர வேண்டும்'' எனக் கோருகின்றனர்.

தமிழக அரசு இலவசப் படகு போக்குவரத்து நடத்துமா? என்ற சந்தேகம் ஒருபுறமிருக்கட்டும்; இராமேசுவரம் பகுதி மீனவர்கள் இன உணர்வு கொண்டு ஈழத் தமிழர்களைத் தங்கள் படகுகளில் ஏற்றி வருவதைக் கூட கருணாநிதியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இது தனது பதவிக்கு ஆபத்தாய் முடியும் என்பதால், இலங்கையில் இருந்து ஈழத் தமிழர்களை ஏற்றி வரும் படகுகளின் மீன்பிடி உரிமையை ரத்து செய்ய உத்தரவிட்டுள்ளார், அவர். மனிதாபிமானமற்ற இந்த உத்தரவை எதிர்த்து இராமேசுவரம் பகுதி மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்பது போல, அங்கிருந்து தப்பித்து வரும் தமிழர்களை இந்திய கப்பற்படை அதிகாரிகளும், தமிழக அரசின் ''க்யூ'' பிரிவு உளவுப் போலீசும் புலிகள் என முத்திரை குத்தவும் தயங்குவதில்லை. 31 ஈழத் தமிழர்களை புலிகளின் ஆதரவாளர்கள் என சந்தேகங் கொண்டு, சிறப்பு முகாம் சித்திரவதை கூடத்திற்கு அனுப்பிவிட்டது தமிழக அரசு. மேலும் தற்சமயம் தமிழகம் வந்துள்ள ஈழத் தமிழர்களுக்கு அகதிகள் என்ற தகுதியினை வழங்கவும் தமிழக அரசு தயாராக இல்லை. ''தகுந்த சான்றுகள் இன்றி தமிழகம் வந்துள்ள ஈழத் தமிழர்கள்'' எனக் கூறி, சர்வதேச அகதிகளுக்கு வழங்க வேண்டிய உரிமைகள் - சலுகையினையும் பறித்து வருகிறது, தி.மு.க. அரசு.

போரில் ஈடுபட்டு வரும் புலிகளுக்கும், போர்ப் பகுதியில் வாழும் மக்களுக்கும் டீசல், மண்ணெண்ணெய், மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பண்டங்களைத் தமிழகத்தில் இருந்து எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு மிதவை சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஈழத் தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள இனவெறி தாக்குதலைக் கண்டனம் செய்யாமல், தமிழர்கள் அகதிகளாக ஓடிவருவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என இலங்கை அரசை எச்சரிக்கிறது இந்திய வெளியுறவுத் துறை.


இந்த ஓட்டுக் கட்சிகளின் 'தேசிய ஒருமைப்பாடு' என்ற பொருளற்ற கூச்சலுக்கு மயங்கி, ஈழத் தமிழர்கள் மீது ஏவிவிடப்படும் அடக்குமுறைகளைக் கைகாட்டி வேடிக்கை பார்ப்பதை விட, தமிழகத்திற்கு அவமானம் தரத்தக்கது வேறு எதுவும் அல்ல!

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## காஷ்மீரை ஆள்வது யார்?

காஷ்மீரில் அனந்த் நாக் மாவட்டத்திலுள்ள சிறீகுப்வாரா என்ற ஊரில் பொது மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியொன்றில் கடந்த அக்டோபர் 23-ந் தேதியன்று நடந்த குண்டு வெடிப்பில் ஏழு பேர் இறந்து போயினர். முஸ்லீம் முஜாஹிதீன் குழுவைச் சேர்ந்த போராளி ஒருவரைப் பிடிப்பதற்காக, இந்திய இராணுவமே இக்குண்டு வெடிப்பை நடத்தியுள்ளது. புதிய முதல்வராக முடி சூடிக் கொண்ட பருக் அப்துல்லாவால், "இக்குண்டு வெடிப்பு என்னை வெட்கி தலை குனியச் செய்கிறது" என புலம்பத்தான் முடிந்தது.

## ஆந்திரப் போலீசின் குரூரம்

மக்கள் யுத்தக் குழுவுடன் நடந்த மோதலில் தலைமை போலீசுக்காரர் பீம்சிங் இறந்து போனதற்குப் பழி தீர்த்துக் கொள்ள, ஆந்திராவின் வாராங்கல்லைச் சேர்ந்த ஆண்டி நாராயணா என்ற மருத்துவரை நிராயுத பாணியாகச் சுட்டுக் கொன்றது ஆந்திர போலீசு. நாராயணா படுகொலை செய்யப்பட்டதை அறிந்த மோகிலி சார்லா மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள் வெகுண்டெழுந்து தன்னிச்சையாகச் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீசுக்கும் கிராமக்களுக்கும் நடந்த மோதலில் பலர் படுகாயமடைந்தனர்; நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். மக்களின் கோபக் கனலில் தப்பிக்கும் முகமாக, இப்படுகொலை பற்றி சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார், சந்திரபாபு நாயுடு.

## தூத்துக்குடி மீனவர்களின் முற்றுகைப் போர்

தூத்துக்குடியில் அமைந்துள்ள தாமிர உருக்காலை - ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு, மூலப் பொருள் கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகத்தை நோக்கி வருவதைக் கண்டித்து, மீனவர்கள் அக். 22 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தைத் துவக்கியுள்ளனர். மறுநாள் (அக்.23) தாமிரத்தை ஏற்றி வந்த இத்தாலி நாட்டுக் கப்பல் கடலில் தென்பட்டவுடன், நூற்றுக்கணக்கான மீனவர்கள் இயந்திர - நாட்டுப் படகுகளில் சென்று நடுக்கடலிலேயே அக்கப்பலை முற்றுகையிட்டனர். துறைமுக அதிகாரிகள், "அக்கப்பல் துறைமுகத்தினுள் நுழைய அனுமதிக்கவில்லை" என உறுதிகொடுத்த பின் தான் முற்றுகை விலகிக் கொள்ளப்பட்டது.

## 'மார்க்சிஸ்டு'களின் முதலைக் கண்ணீர்

நடந்து முடிந்த பொது மற்றும் சட்ட மன்றத் தேர்தல்களில் தங்களது கட்சியின் செயல்பாடுகளை அலசி ஆராய்ந்த மார்க்சிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி தலைவர்கள், அணிகள் மத்தியில் வர்க்க உணர்வுக்குப் பதில் சாதி உணர்வு வளர்ந்து வருவதாகவும், கட்சி முதலாளித்துவ கட்சிகளின் வாலாகி வருவதாகவும், போர்க்குணமிக்க போராட்டங்களை எடுப்பதற்குப் பதிலாக ஓட்டுச் சீட்டு அரசியல் சதிராட்டங்களில் கட்சி மூழ்கிப் போய் விட்டதாகவும் ஒப்பாரி வைத்துள்ளது. விதை ஒன்னு போட்டால் சுரை ஒன்னா முளைக்கும்?

## முஸ்லீம் மதப் பழமை வாதத்திற்கு விழுந்த அடி

பாகிஸ்தானில் சல்மா வஹீத் என்ற இளம் பெண் தனது தந்தையின் ஒப்புதல் இன்றி செய்து கொண்ட திருமணம் தொடர்பாக லாகூர் உயர்நீதி மன்றத்தில் நடந்து வந்த வழக்கில், "தந்தையின் ஒப்புதல் இன்றி நடந்த அந்த திருமணம் செல்லாதென்று" தீர்ப்பளித்துள்ளது அந்நீதிமன்றம். மேலும் அத்தீர்ப்பு, பெண்கள் திருமணம் செய்து கொள்ள வாலி எனப்படும் பாதுகாவலர்களின் ஒப்புதல் தேவை; பாதுகாவலர்கள் இல்லாத பட்சத்தில் அரசு பாதுகாவலராக இருந்து ஒப்புதல் தரும் திருமணங்கள் தான் சட்டப்படி செல்லும் எனக் குறிப்பிட்டுள்ளது. இப்பிற்போக்குத்தனமான தீர்ப்பை எதிர்த்து பாகிஸ்தானிய பெண்கள் அமைப்புகள் தொடர்ந்து போராடிய பின்னர்தான், இத்தீர்ப்பை அந்நாட்டு உச்ச நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

## மெத்தனமா? உடந்தையா?

போரிங்கர் மான்ஹைம் (இந்தியா) லிமிடெட் என்ற அந்நிய கூட்டு நிறுவனம், "காம்சட் போர்ட்" என்ற தொற்று நோய் தடுப்பு மாத்திரைகளைத் தயாரித்து, நாடெங்கும் விற்பனை செய்து வருகிறது. இம்மாத்திரைய உட் கொண்டதால் அகமத் நகரைச் சேர்ந்த 62 பேர் உயிருக்குப் போராடும் அபாயக் கட்டத்தை அடைந்தனர்; கர்நாடக மாநிலத்தில் இரண்டு பேர் இறந்து போயினர். கனடா நாட்டைச் சேர்ந்த இந்நிறுவனத்தின் தலைவர் பால் ஸ்டின்சன் மீது கிரிமினல் வழக்குத் தொடர தயாரானது மைய அரசு. ஆனால் அவரோ கைது செய்யப்படும் முன்பாகவே, போபால் விபத்துக்கு காரணமான யூனியன் கார்பைடு தலைவரைப் போலவே, கனடா நாட்டிற்குத் தப்பிச் சென்று விட்டார்.

## ஐ.மு.-வின் பார்ப்பனீயப் பற்று

தேவே கௌடா தலைமையிலுள்ள ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்து விடாமல் இருப்பதற்காக, ஆயுத சண்டிகா யாகம் நடைபெறவுள்ளது. டிசம்பர் இறுதி வாரத்தில் கர்நாடகாவிலுள்ள துர்கா பரமேஸ்வரி கோவிலில் ஒரு கோடி ருபாய் செலவில் நடைபெறவுள்ள இந்த இந்து மதச் சடங்கு, அரசு விழாவாகவே நடத்தப் பெறும். இதனைப் போன்றே, மகாசுதர்சன ஹோமம் என்ற வேள்வியினை தமிழ்நாட்டிலுள்ள சீறிரங்கம் அரங்க நாதர் கோவிலில் நவம்பர் 17-ந் தேதி நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதற்கான செலவை (ரூ. 60,000) 'நாத்திக' தி.மு.க. அரசு ஏற்றுக் கொண்டு விட்டது.

## டியு - பாண்டின் முக விலாசம்

அமெரிக்காவில் டியு - பாண்டிற்குச் சொந்தமான 14, ஆலைகளில் இருந்து வெளியேறிய கழிவு, அவ்வாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் சுற்றுச் சூழலை மாசுபடுத்தியதால், 144 கோடி ருபாய் அபராதம் கட்ட வேண்டும் என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தமிழ்நாட்டின் கும்மிடி பூண்டியில் விமான டயர் தொழிற்சாலை அமைத்து வரும் இந்நிறுவனத்திற்கு ஆதரவாகப் பரிந்து பேசி வரும் கருணாநிதியின் முகத்தில் கரியைப் பூசிவிட்டது இத்தீர்ப்பு.

## நடுக்கடலில் உல்லாசபுரி

பம்பாயின் கஃபே பாரேட் பகுதியை ஒட்டியுள்ள கடலினுள் மிதவை ஐந்து நட்சத்திர விடுதியைக் கட்ட அனுமதி அளிக்க உள்ளது பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசு. இதனால் 10,000 மீனவர்களின் வயிற்றில் மண் விழுவதோடு, அக் குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் இடத்தில் இருந்து எவ்வித நட்ட ஈடின்றியும் துரத்தப்படும் அபாயமுள்ளது. இதை எதிர்த்து மகாராஷ்டிரா மீனவர்கள் ஒருங்கிணைந்து போராடத் துவங்கியுள்ளனர்.

தூத்துக்குடி மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம்: ஏகாதிபத்திய எதிர்ப்பில் புதிய அத்தியாயம்




www.padippakam.com



## காலணியை விழுங்கிய கண தனவான்கள்

சர்க்கரை ஊழல், யூரியா ஊழல், டெலிபோன் ஊழல், கால்நடை ஊழல், சுடுகாட்டு ஊழல் என்று நாடே ஊழல்மாக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் போது, மகாராஷ்டிர மாநிலத்தில் 500 கோடி ரூபாயை விழுங்கிய காலணி ஊழல் இப்போது மெதுவாக வெளியே தலைகாட்டியுள்ளது. ''கோட்டு - சூட்டு'' போட்ட பெரு முதலாளிகளும் அதிகார வர்க்கத்தினரும் கூட்டுச் சேர்ந்து கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இக் கொள்ளை நடத்தியுள்ளனர்.

மகாராஷ்டிராவில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் திரண்டுள்ள காலணித் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 25,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு குறைந்த வட்டியில் கடனுதவி பெற 1982-ல் அரசு சலுகையை அறிவித்தது. இதுதவிர குடிசைத் தொழிலாக தயாரிக்கப்படும் காலணிகளுக்கு மானியமும், வரிச் சலுகைகளும் கொடுத்தது. ஆனால், காலணித் தொழிலாளர்கள் தமது கூட்டுறவு சங்கத்தை வெற்றிகரமாக நடத்த இயலாத நிலை ஏற்பட்டபோது, காலணி தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பெரு முதலாளிகள் அக் கூட்டுறவு சங்கத்தையே மோசடி - தில்லுமுல்லுகள் மூலம் அதிகார வர்க்கத்தின் உதவியோடு கைப்பற்றிக் கொண்டனர். குறிப்பிட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் நொடித்துப் போய் திவாலாகும்போது பெரு முதலாளிகள் தமது பினாமிகளைக் கொண்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலணி தொழிலாளர்களை போலியாக இச்சங்கத்தில் உறுப்பினராக்கி, பொய்யான கணக்கு காட்டி, மோசடி தேர்தல் நடத்தி சங்கத்தையே கைப்பற்றிக் கொள்கின்றனர். பல முதலாளிகள் 5 முதல் 10-க்கும் மேற்பட்ட சங்கங்களை இவ்வாறு கைப்பற்றியதோடு, புதிதாக பல சங்கங்களை போலியாக உருவாக்கி அதன் மூலமும் கொள்ளையில் ஈடுபட்டனர்.



ஆதிவாசிகளால் இடிக்கப்பட்ட 'மார்க்சிஸ்டு'களின் சிலைகள்; (உள்ளே) 'மார்க்சிஸ்டு' ரவுடி பாசுபகத்.

ஒரு பெருமுதலாளி 1000 பேர் கொண்ட 4 கூட்டுறவு சங்கங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்றால், ஒரு காலணித் தொழிலாளிக்கு கடனாகக் கிடைக்கும் ரூ. 25,000 மூலம் ஒரு ஆண்டுக்கு ரூ. 10 கோடியைக் கைப்பற்றிக் கொள்கிறார். பம்பாய் மாநகரில் மட்டும் 20,000 காலணித் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளதாக கணக்கு காட்டப்படுகிறது. இதன்படி, ஆண்டுதோறும் 500 கோடி ரூபாய் பெரு முதலாளிகளால் சுருட்டப்படுகிறது.

காலணி தயாரிக்கும் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள், தமது தயாரிப்புகளை கூட்டுறவுச் சங்கங்களில் தயாரித்ததாகக் காட்டி விற்பனை வரிச் சலுகை, வருமான வரித் தள்ளுபடிகளையும் பெறுகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வரை ஏப்பம் விடுகின்றன. மேலும் காலணித் தொழிலாளர்கள் பெயரால் வாங்கப்படும் கடனையும் இவை திருப்பிச் செலுத்துவதில்லை. தமது பினாமி கூட்டுறவுச் சங்கம் நொடித்துப் போய் திவாலாகி விட்டதாக கணக்குகாட்டி விட்டு வேறு புதிய பினாமி சங்கங்களை உருவாக்கிக் கொள்கின்றன.

தாவூத் ஷூஸ் நிறுவனத்தின் சத்ருதீன் தயா, மெட்ரோ ஷூஸ் நிறுவனத்தின் ரபீக் தீஜானி, மிலானோ ஷூஸ் நிறுவனத்தின் கிஷோர் முதலான பெரு முதலாளிகள் இம் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர கூட்டுறவுத் துறை பதிவாளர் மற்றும் உயர் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதிலே தாவூத் ஷூஸ் நிறுவனத்தின் முதலாளியான தயா, பம்பாய் குண்டு வெடிப்புக்குக் காரணமாக கிரிமினல் மாஃபியா தலைவன் தாவூத் இப்ராஹிமின் கூட்டாளி ஆவார். காலணி ஊழலில் சுருட்டிய கோடிக்கணக்கான ரூபாய்கள் ஹவாலா புள்ளிகள் மூலம் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டு விட்டது.

வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதே, கடந்த செப்டம்பரில் வழக்கு ஆவணங்களை வைத்திருந்த அறை தீயிடப்பட்டது. சாட்சியங்களை அழிப்பது, வழக்கு பற்றிய குறிப்புகளில் தில்லுமுல்லு செய்வது முதலானவற்றில் மாநில போலீசாரே ஈடுபடுவதாக புலனாய்வுத் துறையினர் புலம்புகின்றனர். கொள்ளையர்கள் எந்த அளவுக்கு அரசியல் - அதிகார வர்க்க பலம் கொண்டவர்கள் என்பதையே இது நிரூபித்துக் காட்டுகிறது. விசாரணையை வரைமுறையின்றி நீட்டித்து வழக்கை நீர்த்துப் போகச் செய்வது, குற்றவாளிகளைத் தப்புவிப்பது என்பதுதான் ஒவ்வொரு ஊழல் விவகாரத்தின் தலைவிதியாக உள்ள நிலையில், காலணி ஊழல் மட்டும் விதிவிலக்காகிவிட முடியுமா என்ன?

## ஆதிவாசிகளை அச்சுறுத்தும் 'மார்க்சிஸ்டு' ரௌடி

ஒடுக்கப்பட்ட மக்களின் தோழனாகக் காட்டிக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு'கள், தமது ரௌடித்தனத்தாலும் ஆதிக்கத்தாலும் ஜார்கந்து ஆதிவாசி மக்களிடமிருந்து அம்பலப்பட்டு தனிமைப்



படிப்பகம்

www.padippakam.com



பட்டுப் போயுள்ளார்கள். மே.வங்கத்தின் மித்னாபூர் மாவட்டத்தில் ஆதிவாசிகள் நிறைந்த ஜம்போனி பிராந்தியத்தில் பிரபல தலைவராக இருந்தார், பாசுபகத். வட்டார 'மார்க்சிஸ்டு' கட்சி செயலாளரான இவரது அண்ணன் கட்சியின் எம்.எல்.ஏ.வாக உள்ளார். கட்சியில் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு இப்பிராந்தியத்தின் முடிசூடா மன்னனாக வளர்ந்தார், பாசுபகத்.

இவரது அனுமதியின்றி எந்தக் கட்சியும், அமைப்பும் இப்பகுதியில் பொதுக்கூட்டம் நடத்த முடியாது. பாசு பகத்தின் அனுமதியின்றி இப்பகுதியிலுள்ள ஆதிவாசிகள் திருமணமோ, விழாவோ நடத்த முடியாது. ஆதிவாசிகளை கொத்தடிமைகளைப்போல நடத்திய இவரது ஆதிக்கத்தை யாராவது எதிர்த்தால் அதற்கான விலையைத் தர நேரிடும். கடந்த எட்டாண்டுகளில் இவரது ஆதிக்கத்தை எதிர்த்த ஜார்கந்து கட்சி ஊழியர்கள் பலர் 'மார்க்சிஸ்டு' குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். சிலர் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30-ம் நாளன்று ஜார்கந்து ஆதிவாசிகள் உறுதிமொழி ஏற்பு நாளாக செயல்படுத்தி வருகின்றனர். 1856-ல் சோட்டா நாக்பூரில் வெள்ளையர்களின் கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கத்துக்கு எதிராக ஆதிவாசிகள் கிளர்ந்தெழுந்து போராடிய நாளை நினைவு கூறும் வகையில் ஜூன் 30-ம் நாளன்று உறுதிமொழி ஏற்பதை தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர். இவ்வாண்டு இந்த உறுதிமொழி ஏற்பு நாளை நடத்தக்கூடாது என்று உத்திரவு போட்டார் பாசுபகத். ஆதிவாசிகள் இதற்குப் பணிய மறுத்து விழா ஏற்பாடுகளைச் செய்ய முற்பட்டதும், ஆத்திரமடைந்த 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் ஆதிவாசிகளைத் தாக்கியதோடு, 1856-ம் ஆண்டு எழுச்சியின் நாயகர்களான கனூ, சித்து ஆகியோரின் நினைவுச் சின்னங்களைத் தகர்த்தெறிந்தனர்.

இது மட்டுமின்றி, வனத்துறை அதிகாரிகள் மூலம் ஆதிவாசிகள் காடுகளில் விறகு பொறுக்கவும் பாசுபகத் தடை விதித்தார். இதை மீறி காடுகளில் விறகு பொறுக்கிய ஆதிவாசிகள் மீது மரங்களை வெட்டிக் கடத்தியதாக பொய்வழக்குகள் போடப்பட்டன.

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாத மத்தியில் மழைக் கடவுளான இந்திரனை வழிபட்டு வயல்களில் சால் மரக் கிளைகளை நடுவதென்பது ஆதிவாசிகளின் மரபாக உள்ளது. ஆனால் இவ்வாண்டு காடுகளிலிருந்து சால் மரக் கிளைகளை வெட்டி வந்து வயல்களில் நட்டு ஆதிவாசிகள் வழிபட முடியவில்லை. காடுகளில் மரங்களை வெட்டிக் கடத்தியதாக வனத்துறை அதிகாரிகள் பல கிராமங்களில் 'ரெய்டு' நடத்தி, பலரைக் கைது செய்தனர்.

பாசுபகத்தின் ஆதிக்கத்தையும் அட்டூழியத்தையும் கண்டு வெகுண்டெழுந்த ஆதிவாசிகள் கடந்த செப்டம்பர் இறுதியில் கித்னி நகரிலுள்ள 'மார்க்சிஸ்டு' கட்சி அலுவலகத்தைத் தாக்கி, இரு 'மார்க்சிஸ்டு' தியாகிகளின் மார்பளவுள்ள சிலைகளைத் தகர்த்தெறிந்தனர். இதைத் தொடர்ந்து பெருமளவு போலீசுப்படை குவிக்கப்பட்டு ஜார்கந்து கட்சியின் முன்னணியாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு அடுக்குமாடி கொண்ட 'மார்க்சிஸ்டு' கட்சி அலுவலகத்தை இன்று போலீசு பாதுகாத்து நிற்கிறது. போலீசு மற்றும் கட்சிக் குண்டர்களின் பாதுகாப்போடுதான் பாசுபகத் இன்று வெளியே நடமாடுகிறார். அண்மையில் இப் பகுதியில் 'மார்க்சிஸ்டு' கட்சி நடத்திய பொதுக்கூட்டத்துக்கு 200-க்கும் போலீசார் பாதுகாப்பாக நின்றனர். ஆனால் பொதுக் கூட்டத்துக்கு 50 பேர் கூட வரவில்லை.

முன்பு மித்னாபூர் மாவட்டத்தில் பின்பூரும், ஜம்போனியும் போலிக் கம்யூனிஸ்டுகளின் கோட்டையாக இருந்தது. இப்போது பின்பூர் ஜார்கந்து கட்சியின் பிடியில் போய்விட்டது. அதே வழியில் அடுத்து ஜம்போனி பிராந்தியமும் பறிபோய் விடுமோ என்று 'மார்க்சிஸ்டு'கள் பீதியடைந்து போயுள்ளனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் பித்தலாட்டக் கொள்கைகள் தோற்றுப் போய்விட்ட நிலையில், இனி ரௌடித்தன ஆதிக்கத்தாலும் அச்சுறுத்தலாலும் மட்டுமே உழைக்கும் மக்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்கிற கடைகோடி நிலைக்கு 'மார்க்சிஸ்டு'கள் தள்ளப்பட்டு விட்டனர். மித்னாபூர் மாவட்டம் மட்டுமல்ல; மே.வங்க மாநிலமே அந்த திசையில்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நல்ல முன்னேற்றம் தான்!

## கொள்ளையில் ஓட்டுப் பொறுக்கிகள் கொள்ளை நோயில் நாட்டு மக்கள்

தலைநகர் டெல்லியில் தொடங்கி, இந்தியாவெங்கும் டெங்கு - மலேரியா நோயினால் கடந்த இரு மாதங்களில் மட்டும் 1000-க்கும் மேற்பட்டோர் மாண்டு போயுள்ளனர். டெல்லியில் மட்டும் டெங்கு காய்ச்சல் நோயினால் 300-க்கும் மேலானோர் மாண்டுள்ளனர். ராஜஸ்தான் மாநிலத்தில் 27,000 பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை 400 பேர் மாண்டு போயுள்ளதாகவும் செய்திகள் வருகின்றன. மத்தியப் பிரதேசத்தில் மலேரியா நோயினால் ஏறத்தாழ 500 பேர் இறந்துள்ளனர் என்று அம்மாநில முன்னாள் அமைச்சரே வாக்குமூலம் அளித்துள்ளார். உத்திரப்பிரதேசத்தில் கான்பூர் நகரில் 100 பேர் மலேரியா நோயினால் மாண்டு போயுள்ளனர். பீகாரில் கொசுக்களால் பரவும் நோய்கள் சர்வசாதாரணமாகி, சாவுகள் அங்கே மலிவானதாகிவிட்டது.

"டெங்கு" கொள்ளை நோய் தாக்கி மருத்துவமனையில் உயிருக்குப் போராடும் உழைக்கும் மக்கள)



கடந்த செப்டம்பர் மாதத்திலேயே உலக சுகாதார நிறுவனம் (WHO), இந்தியாவில் டெங்கு காய்ச்சல் பரவுவதற்கான அபாயம் உள்ளதைப் பற்றி எச்சரித்தது. ஆனாலும் மத்திய சுகாதார அமைச்சகமும் தொற்று நோய்த் தடுப்புக் கழகமும் மெத்தனமாகச் செயல்பட்டு ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டு விட்டன. பொது நல வழக்கின் அடிப்படையில் நீதித்துறை தலையிட்டு, டெங்கு - மலேரியா நோயைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கண்காணித்து உத்திரவிடும் அளவுக்கு சுகாதாரத்துறை அலட்சியமாகச் செயல்பட்டுள்ளது.

கொசுக்களால் பரவும் டெங்கு விஷக் காய்ச்சல் கடந்த 40 ஆண்டுகளில் 54 முறை இந்தியாவைத் தாக்கியுள்ளது. குறிப்பாக, கிழக்காசிய ஏழை நாடுக



படிப்பகம்

www.padippakam.com



ளில் தான் இந்நோய் வேகமாகப் பரவித் தாக்குகிறது. முன்னைவிட அதிக வீரியத்துடன் நோய்க் கிருமிகள் உள்ளதால், முந்தைய மருந்துகளால் நோயைக் கட்டுப்படுத்த இயலவில்லை. புதிய மருந்து கண்டறியப் படாத நிலையில், தற்போதைய வீரியமிக்க டெங்கு நோய் தாக்கிய பலர் விரைவிலேயே மரணமடைகின்றனர். டெங்கு கிருமிகளில் 4 வகை உள்ளதென்றும், தற்போதைய நோய் 4-வது வகையைச் சேர்ந்த மிகக் கொடிய நோய் என்றும் மருத்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

உலக வங்கி, ஐ.எம்.எப்-ன் உத்திரவுப்படி அடுத்தடுத்து அடிப்படை சுகாதார வசதிகளை அறவே புறக்கணித்ததன் எதிர் விளைவுதான் தற்போதைய கொள்ளை நோய்கள். பாதுகாப்பான குடிநீர் - சுகாதார வசதிகளற்ற கிராமப் புறங்களைத் தாக்கி வந்த இக்கொள்ளை நோய்கள் இப்போது பெரு நகரங்களையும் தாக்கும் அளவுக்கு தீவிரமானதற்கு இதுவே அடிப்படையான காரணமாக உள்ளது. ஆனாலும் சுகாதார அமைச்சகம், தொற்று நோய் தடுப்புக் கழகம், மலேரியா ஒழிப்பு தேசிய இயக்கம் ஆகியவற்றின் மீது பழிபோட்டுவிட்டு ஆட்சியாளர்கள் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

மலேரியா நோய்க் கிருமியைக் கண்டறிந்த விஞ்ஞானி ரோனால்டுராஸ்-இன் நூற்றாண்டு அடுத்த ஆண்டு வருகிறது. ஆனால் மலேரியா - டெங்கு நோய்களை இன்னமும் ஒழிக்க முடியாத அளவுக்கு ஊழல் கொள்ளைக்கும், கொள்ளை நோய்களுக்கும் பேர் போன நாடாக இந்தியா முன்னேறிக் கொண்டிருக்கிறது.


## காட்டுமிராண்டிகளின் கூட்டாளியாக நீதித்துறை

ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் நீதிமன்றங்கள் முற்போக்கு பாத்திரமாற்றி வருவதாக பத்திரிகைகள் பிரமையூட்டி வரும் வேளையில், நீதித்துறையின் யோக்கியதையை 9 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இளம்பெண் உடன்கட்டை எரிப்பு வழக்கு திரைகிழித்துக் காட்டி விட்டது.

ராஜஸ்தான் மாநிலம் தியோரலா கிராமத்தில் 1987-ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் தேதியன்று, 18 வயதான ரூப் கன்வர் என்ற இளம்பெண், திருமணமான ஏழே மாதங்களில் அவளது கணவன் மாண்டதும் "சதி" எனும் உடன்கட்டை ஏற்றப்பட்டாள். மாண்டுபோன கணவனின் சிதையிலேயே அவளும் எரிக்கப்பட்டாள். நாகரீக உலகத்தையே தலைகுனிய வைக்கும் இக்கொடிய காட்டுமிராண்டித்தனம் அக் கிராம மக்கள் முன்னிலையே நடத்தது. இதையொட்டி ரூப் கன்வரின் மாமனார் உள்ளிட்டு 39 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடந்து வந்தது.

இந்த வழக்கில் வலுவான சாட்சியங்கள் இல்லை என்று கூறி, கடந்த அக்டோபர் மத்தியில் குற்றவாளிகள் அனைவரையும் "நீம் காதானா" என்னும் மாவட்ட நீதி மன்றம் விடுதலை செய்துவிட்டது. கொல்லப்பட்ட ரூப் கன்வரின் மாமனாரும் ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியருமான சுமேர்சிங் செகாவத் "கடைசியாக நீதி கிடைத்து விட்டது; எமது பாரம்பரிய கலாச்சாரத்துக்கு எதிராக நடந்த அவதூறு பிரச்சாரம் முறியடிக்கப்பட்டு விட்டது" என்று பெருமையுடன் கூறுகிறார். படுபிற்போக்குத்தனமான இத்தீர்ப்பு வெளியான அன்றே, போலீசுக் காவலில் இருந்த ரூப் கன்வர் கொலை மேடையை (சதி ஸ்தலம்) ராஜபுத்திர சாதியினர் கைப்பற்றிக் கொண்டனர். தீர்ப்பை வரவேற்று வாளேந்திய ராஜபுத்திர சாதியினர் ஜெய்ப்பூரில் வெற்றி விழா ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினர். ரூப் கன்வர் உயிருடன் எரிக்கப்பட்ட இடத்தில் "சதி மாதா" கோயில் கட்ட வசூல் இயக்கமும் நடத்தி வருகின்றன. இத்தனைக்கும் பிறகும் அரசு எந்திரம் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கவே செய்தது.

"ராஞ்சி நகரில் படித்த நவீன காலப் பெண்ணாகிய ரூப் கன்வர், ஒருபோதும் உடன்கட்டைக்கு உடன்பட்டிருக்க மாட்டாள். அவளுக்கு போதை மயக்க மருந்து கொடுத்து உடலெங்கும் நெய்யைப் பூசி சிதைத் தீயில் தள்ளி விட்டனர். உயிரோடு எரிக்கப்பட்ட அப்பெண்ணின் அலறல் வெளியே கேட்காத வண்ணம் "ஜெய் சதி மாதா!" என்று கோஷம் போட்டனர். சாதிக் கட்டுப்பாடு காரணமாக இந்த உண்மைகள் வெளியே வரவில்லை" என்கிறார், சைனி சாதியைச் சேர்ந்த அக்கிராமத் தலைவர்.



இளம்பெண் ரூப் கன்வர் உடன்கட்டை ஏற்றப்பட்ட இடத்தைக் கைப்பற்றி, புனிதத் தலமாக்கி வழிபடும் ராஜபுத்திர சாதிவெறியர்கள்

ரூப் கன்வர் கட்டாயமாக தீயில் தள்ளப்பட்டாளா இல்லையா? ராஜபுத்திர மரபை மீறி கணவன் இறந்தபின் மணக்கோலத்தில் அப்பெண் அலங்காரம் செய்யப்பட்டது ஏன்? என்று விரிவாகவோ ஆழமாகவோ நீதிமன்றம் விசாரிக்கவில்லை. அப்பெண் உடன்கட்டை ஏற்றப்பட்டதை வாய்மூடி பீதியுடன் பார்த்த கிராம மக்களிடமும் விசாரணை நடத்தாமல், வலுவான சாட்சியம் இல்லை என்று கூறி சாதியக் காட்டுமிராண்டித்தனத்தை நீதிமன்றம் நியாயப்படுத்தியுள்ளது.

நீதித்துறையின் அயோக்கியத்தனம், ராஜஸ்தானில் இப்போது முதன் முறையாக நடப்பது அல்ல. ராஜஸ்தானில் தொடரும் குழந்தைத் திருமண முறையை எதிர்த்துப் போராடிய பன்வாரி தேவி எனும் சமூக சேவகி மீது நிலப்பிரபுத்துவ ஆதிக்க வெறியர்கள் பாலியல் வன்முறையை ஏவி, வீதிகளில் நிர்வாணமாக இழுத்து வந்து அவமானப்படுத்தினர். இக்கொடுங்கோலர்களைக் குற்றமற்றவர்கள் என்று நீதிமன்றம் விடுதலை செய்தது.

நாடு நாலுகால் பாய்ச்சலில் 21-ம் நூற்றாண்டை நோக்கி முன்னேறுவதாக ஆட்சியாளர்கள் தம்பட்டம் அடிக்கிறார்கள். ஆனால் இந்தியச் சமூகமோ காட்டுமிராண்டித்தனமாக மூட நம்பிக்கைகளில் மூழ்கி கற்காலத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## காஷ்மீர்:

# மீண்டும் ஒரு மோசடித் தேர்தல்
# மீண்டும் ஒரு பொம்மையாட்சி

காஷ்மீரில் அரசு பயங்கரவாதிகள் அண்மையில் ஒரு மோசடித் தேர்தலை நடத்தவிட்டு அமைதியும் ஜனநாயகமும் அங்கே வேர்விடத் தொடங்கியுள்ளதாக பம்மாத்து செய்து வருகின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆசியோடும் 'தேசிய'க் கட்சிகளின் ஆதரவோடும் நடந்த இந்த ஜனநாயகக் கேலிக் கூத்தைத் தொடர்ந்து, காஷ்மீரத் துரோகியும் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவருமான பரூக் அப்துல்லா முதல்வராக முடிசூட்டிக் கொண்டுள்ளனர்.

காஷ்மீரின் 90% மக்கள் இம்மோசடித் தேர்தலை முற்றாகப் புறக்கணித்துவிட்ட நிலையில், மாநில ஆளுநரான கிருஷ்ணா ராவ், 58% வாக்குகள் பதிவானதாக கூசாமல் புளுகியதைக் கேட்டு காஷ்மீரப் பத்திரிகைகள் கைகொட்டிச் சிரித்தன. ஏனெனில் பல வாக்குச் சாவடிகளில் மாலை 4 மணி வரை விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் மட்டுமே வாக்களித்தனர். அனந்த நாக்கிலுள்ள ஒரு வாக்குச் சாவடியில் 1100 வாக்காளர்களில் வெறும் 30 பேர் மட்டுமே வாக்களித்தனர். புல்வாமா தொகுதியிலுள்ள ஒரு சாவடியில் 843 வாக்காளர்களில் ஒருவர் கூட வாக்களிக்கவில்லை. அனைத்துத் தொகுதிகளிலும் இதே நிலை நீடித்ததை பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் உண்மை அறியும் குழுக்கள் அம்பலப்படுத்திய பின்னரும், பெருவாரியான மக்கள் தேர்தலில் உற்சாகமாகப் பங்கேற்று பிரிவினைவாதிகள் - பயங்கரவாதிகளின் முகத்தில் கரிபூசிவிட்டனர் என்று ஆட்சியாளர்களும் தேசியப் பத்திரிகைகளும் புளுகி வருகின்றன.

காஷ்மீரில் இந்தியாவின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிவரும் அரசியல் கட்சிகள் - போராளிகளின் கூட்டமைப்பான ஹூரியத், தேர்தலைப் புறக்கணித்துவிட்ட நிலையில், அதன் முன்னணித் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். இரண்டாம் மட்டத் தலைவர்கள் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்யக்கூட அனுமதிக்கப்படவில்லை. தேர்தல் புறக்கணிப்பு பொதுக் கூட்டங்களுக்குத் திரண்ட பொதுமக்கள் மீது தடியடியும் துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. எந்தப் போராளி அமைப்பும் அறைகூவல் விடுக்காத போதிலும், தேர்தலுக்கு முதல் நாளன்று காஷ்மீரிகள் தன்னெழுச்சியாக கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினர். மோசடித் தேர்தல் வேண்டாம்; விடுதலை வேண்டும் என்ற முழக்கங்கள் எங்கும் எதிரொலித்தன.

காஷ்மீரில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் மட்டும் 60,000 பேர் இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர். இப்பயங்கரவாதப் படுகொலைகளை மூடி மறைக்க இப்போது நடந்த மோசடித் தேர்தலின்போது கூட 250 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 33 லட்சம் பேர் கொண்ட காஷ்மீரில் தேர்தலின் போது 8.5 லட்சம் ராணுவ - துணை ராணுவப் படைகள் குவிக்கப்பட்டன. தலைநகரான சிறீநகரில் 2 லட்சம் மக்கள் தொகைக்கு இணையாக ராணுவம் குவிக்கப்பட்டது.

வாக்குச் சாவடியில் வைக்கப்படும் அடையாளப் புள்ளி விரலில் இல்லாவிட்டால் கைகள் துண்டிக்கப்படும் என்று மிரட்டி, வீடுவீடாக துப்பாக்கி முனையில் வாக்காளர்களை இழுத்து வந்து ராணுவம் ஓட்டுப் போட வைத்தது. கட்டாய வாக்களிப்பு முறையை எதிர்த்துப் போராடிய சோயல் கிராம மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. காஷ்மீரில் அடையாள அட்டை இல்லாமல் யாரும் வெளியே நடமாட முடியாத நிலையில், பலரது அடையாள அட்டைகளைப் பறித்துக் கொண்டு, வாக்களித்த பின்னர்தான் தருவோம் என்று மிரட்டியது. இதுதவிர, சரணடைந்த முன்னாள் போராளிகள் மற்றும் துரோகிகள் - கைக்கூலிகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்து சுயநிர்ணய உரிமைப் போராளிகளை வேட்டையாடியது. இந்திய ஆதரவு பெற்ற கைக்கூலிகளைக் கொண்டு கள்ள ஓட்டு போடவைத்து ஜனநாயகம் திரும்பிவிட்டதாக மாய்மாலம் செய்து வருகிறது.

காஷ்மீரில் அரசு பயங்கரவாத அடக்குமுறையும் அட்டூழியங்களும் தலைவிரித்தாடிய போது, லண்டனில் சுகமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பரூக் அப்துல்லா, இம்மோசடித் தேர்தலில் தமது கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றுவிட்டதாக வெட்கமின்றி மார்தட்டிக் கொள்கிறார்.

''காஷ்மீரில் ஜனநாயகத்தை நிலைநாட்டி, தேசிய நீரோட்டத்தில் இணைக்கப் பாடுபடும் பரூக்கின் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் பிரதிநித்துவம் தருவோம்'' என்கிறது தேவகௌடா அரசு. இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்டு மாநில சுயாட்சிக்கும் உரிமைக்கும் பாடுபடுவேன்; போராளிகளை சரணடைய வைத்து அமைதியை நிலை நாட்டுவேன் என்று இந்திய ஆட்சியாளர்களின் கிளிப்பிள்ளையாக பரூக் பேசுகிறார். 9 ஆண்டுகளுக்கு முன்பு பரூக் ஆட்சியில் ஊழல் - மோசடிகளில் அம்பலப்பட்ட பெருச்சாளிகளே இப்போது மீண்டும் அவர் ஆட்சியில் அமைச்சர்களாகியுள்ளனர்.

காஷ்மீரில் மீண்டும் ஒரு மோசடித் தேர்தல்; மீண்டும் ஒரு ஊழல் - பொம்மை ஆட்சி; மீண்டும் ஜனநாயகத்தின் பெயரால் அடக்குமுறை என்று தொடர்வதையே நிலைமைகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் காஷ்மீரிகள் மீண்டும் ஏமாறுவதற்குத்தான் தயாராக இல்லை. • பரிதி



ஸ்ரீ நகர் வாக்குச்சாவடி ஒன்றில் இராணுவப் பாதுகாப்போடு ஓட்டுப்போட வந்த ஒரேயொரு வாக்காளர்



படிப்பகம்

www.padippakam.com

□ கால்நடைத் தீவன ஊழல் □ மருந்து ஊழல்
□ தார் ஊழல் □ நில ஒதுக்கீடு ஊழல்

# லல்லுவின் 'சமூகநீதி' சாதனைகள்

"பீகார் மக்கள் விழிக்கத் துவங்கிவிட்டனர்! லல்லுவின் அரசாங்கம் ஓடத் துவங்கி விட்டது!" - பீகார் மாநிலத்தில் எங்கு திரும்பினும், இந்த முழக்கத்தைத்தான் இப்பொழுது கேட்க முடிகிறது. அம்மாநிலத்தில் கடந்த ஆறேழு மாதங்களுக்குள் அடுத்தடுத்து அம்பலமாகியுள்ள ஊழல்கள், ராவ், கல்பனாத் ராய், சுக்ராம், ஜெயா - இவர்களின் வரிசையில் 'சமூக நீதி' போராளி லல்லுவையும் சேர்த்து விட்டன.

அம்மாநிலத்தின் கால்நடை வளர்ப்புத் துறையில் 1981-ம் ஆண்டு தொடங்கி நடந்து வரும் முறைகேடுகளால், 1000 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பது இவ்வாண்டின் தொடக்கத்தில் அம்பலமானது. லல்லு முதலமைச்சரானபின் - அதாவது கடந்த ஆறு வருடங்களில் அத்துறையில் சுமார் 600 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடந்துள்ளன.

தமிழகத்தில் இலவச வேட்டி-சேலை திட்ட ஊழலில் நடந்ததைப் போன்று, போலி நிறுவனங்களிடமிருந்து கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் - மருந்துகள் வாங்கியதற்கான 'ரசீதுகள்', 'ஆவணங்கள்' தயாரிக்கப்பட்டு, பொதுமக்களின் வரிப்பணம் சூறையாடப்பட்டுள்ளது. உதாரணமாக, ராஞ்சி கால்நடைப் பண்ணையில் உள்ள 2,000 கோழிகள் 5 கோடி ரூபாய் பெறுமான தீவனங்களைத் தின்றுள்ளதாகவும், கால்நடைகளை வேறுபகுதிக்குக் கொண்டு சென்ற ஒரு லாரி, ஒரே நாளில் 18,000 கி.மீ. பயணம் செய்துள்ளதாகவும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கால்நடைத் துறை அதிகாரிகள், மாநிலத் தலைமைச் செயலக அதிகாரிகள், கருவூல அதிகாரிகள், தீவனங்கள் விற்கும் போலி நிறுவன அதிபர்கள், அரசியல்வாதிகள் என நெருங்கிய வலைப்பின்னல் கொண்ட கிரிமினல் கும்பல், இவ்வூழலின் பின்னே இருந்துள்ளது.

இம்முறைகேடுகளின் மூளையாகச் செயல்பட்டவர்களுள் ஒருவர் கால்நடைத் துறை இயக்குநர் ராம்ராஜ் ராம். ஊழல் குற்றம் சுமத்தப்பட்ட இந்த அதிகாரியை, தீவன ஊழலை விசாரிக்கும் கமிட்டி உறுப்பினராக அமர்த்தினார், லல்லு. இந்த மோசடியை அம்பலப்படுத்திய எதிர்க்கட்சிகள், மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணை கோரி, பீகார் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றி கண்டன.

கால்நடைத் துறையின் முன்னாள் மண்டல இணை இயக்குநர் ஷியாம் பெகாரி சின்கா, சி.பி.ஐ.-யிடம் கொடுத்த வாக்குமூலத்தில், "சென்ற ஆண்டு நடந்த பீகார் சட்டசபைத் தேர்தலின்பொழுது, சமதா கட்சியைச் சேர்ந்த நித்திஷ் குமார், சிவானந்த் திவாரி; பா.ஜ.க.வைச் சேர்ந்த குல்சன் அஜ்மானி; காங்கிரசின் ஜகதீஷ் சர்மா ஆகியோருக்கு நிதி கொடுத்து உதவியதாக"க் கூறியுள்ளார். மேலும், நீதிமன்றக் காவலில் இருக்கும் எஸ்.பி. சின்ஹா உள்ளிட்ட ஊழலோடு தொடர்புடைய 45 அதிகாரிகளுக்கு, லல்லு பதவி நீட்டிப்பு கொடுத்தபொழுது, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஜெகன்னாத் மிஸ்ரா முழு ஒத்துழைப்பு கொடுத்திருப்பதும் விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

இவ்விசாரணையைத் தொடர்ந்து, ஜனதா தள எம்.எல்.ஏ. ஆர்.கே. ராணா, பா.ஜ.க. எம்.எல்.ஏ. தருவ் பகத் உள்ளிட்ட 50 பேர் சி.பி.ஐ.-யால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இவ்வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ. இணை இயக்குநர் பிஸ்வாஸ் தனது அறிக்கையில், "முக்கிய சதிகாரர்களுள் லல்லுவும் ஒருவர்" எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஆதாரமாக, 36 சாட்சியங்களைக் குறிப்பிட்டு, தனது அறிக்கையை சி.பி.ஐ.-ன் தலைமை இயக்குநர் ஜோகிந்தர் சிங்கிடம் கொடுத்தார். ராவ் - தேவே கௌடாவின் விசுவாசப் பிராணியான ஜோகிந்தர் சிங், லல்லுவைக் காப்பாற்றுவதற்காக, பிஸ்வாஸின் அறிக்கையை வெட்டிச் சுருக்கிவிட்டார்.

பாட்னா உயர்நீதி மன்றம் இவ்வெட்டிச் சுருக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. மேலும், விசாரணை அறிக்கைகளை இனி நேரடியாகத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு பிஸ்வாஸிற்கு உத்தரவிட்டது. இத்தீர்ப்புக்கு எதிராக சி.பி.ஐ. இயக்குநர் ஜோகிந்தர் சிங், உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தார். உச்சநீதி மன்றம், பாட்னா உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை தள்ளுபடி செய்திருப்பதோடு, பிஸ்வாஸின் அறிக்கையை வெட்டிச் சுருக்க ஜோகிந்தர் சிங்குக்கு அதிகாரமுண்டு எனத் தீர்ப்பளித்தது.

அதிகார செல்வாக்கின் மூலம் விசாரணையை முடக்கி வரும் லல்லு, அரசியல் எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள சாதி அரசியலைக் கையில் எடுத்துக் கொண்டுள்ளார். "நிலப்பிரபுத்துவ மற்றும் மதவாத சக்திகளின் சதிதான் இவ்வூழல் குற்றச்சாட்டு" எனச் சாடும் லல்லு, ஏழைகளின் பேரணி என்ற பெயரில், தனக்கு ஆதரவாக சாதி ஊர்வலங்களை நடத்தி வருகிறார்.

கால்நடைத் தீவன ஊழல் விசாரணை நடந்து கொண்டிருந்தபொழுதே, அதனுடன் தொடர்புடைய மற்றொரு ஊழலும் அம்பலமானது. மலைவாழ் மக்களுக்கும், அரசுக்கும் சொந்தமான 400 ஏக்கர் நிலம், லல்லு அரசால், சட்டத்திற்குப் புறம்பாக போலி கூட்டுறவு நிறுவனங்களுக்கும், கிரிமினல் பின்னணியுடைய ரியல் எஸ்டேட் அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இம்முறைகேடான மாற்றங்களில் 400 கோடி ரூபாய் மோசடி நடந்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ராஞ்சி நகரில் சந்தை மதிப்புடைய இடங்களாகத் தேர்ந்தெடுத்து, இவர்களுக்கு வழங்கியுள்ளார், லல்லு. கால்நடைத் தீவன ஊழல்

கால்நடைத் துறை இயக்குநர் ராம்ராஜ் ராம்: லல்லுவின் 'சமூகநீதி' ஆட்சியில் குற்றவாளியே நீதிபதி.



ஆர்.கே. ராணா: கால்நடைத் துறையில் மருந்துவராகப் பணிபுரிந்த இவர் லல்லுவின் தயவால் எம்.எல்.ஏ. ஆனார்.





படிப்பகம்

www.padippakam.com

குற்றவாளிகள்தான் இந்த நிலங்களை வளைத்துப் போட்டுள்ளதாகக் குற்றஞ்சுமத்தியுள்ளன, எதிர்க்கட்சிகள்.

கே.பி. சாக்சேனா என்ற அதிகாரி, இம்மோசடி நில மாற்றம் தொடர்பாக விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டுபிடித்தார். ஆனால் லல்லு பிரசாத், இவரது அறிக்கையை கண்டு கொள்ளவில்லை. மேலும் இந்த ஊழல் அம்பலமான பின்பு கூட, சுமார் 250 அதிகாரிகள் கைதாகிவிடாமல் பாதுகாப்பு அளித்து வருகிறார் அவர். இவர்களுள் 60 பேர் ஐ.எ.ஃப்.எஸ். அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

பீகார் மாநிலத்தில் அம்பலமாயிருக்கும் மூன்றாவது ஊழல், சாலைகள் போடுவதற்குப் பயன்படும் தார் வாங்குவதில் நடந்துள்ள முறைகேடுகள். கடந்த ஆறு வருடங்களாக நடந்து வரும் இவ்வூழலில், சுமார் 100 கோடி ரூபாயை லாரி அதிபர்கள் - நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் - அரசியல்வாதிகளைக் கொண்ட கூட்டுக் கும்பல் சுருட்டிக் கொண்டுள்ளது. பீகார் மாநில அரசு கல்கத்தாவில் இருந்து வாங்கும் தாரில் 50 சதவீதம்தான் அரசைச் சென்றடைந்துள்ளது; மீதி 50 சதவீதம் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், லல்லுவின் நெருங்கிய கூட்டாளியுமான இல்யாஸ் ஹுசைனுக்கு இக்கூட்டுக் கொள்ளையில் முக்கிய பங்குண்டு.

இவ்வூழல்களைத் தொடர்ந்து சுகாதாரத் துறை, அரசு மருத்துவமனைக்கு மருந்துகள் வாங்கியதில் 60 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பீகார் மாநில அரசு விதிகளின்படி, மருந்துகளை பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது கல்கத்தாவிலுள்ள சுகாதாரத் துறை இயக்குநர் அலுவலகத்தின் மூலமாகவோதான் வாங்க வேண்டும். ஆனால் இவ்விதிகளுக்குப் புறம்பாக வெளிச்சந்தையில் மருந்துகளை வாங்கியதில்தான் இம்முறைகேடுகள் நடந்துள்ளன.

இந்த ஊழலை விசாரித்த கமிட்டி, ''மருந்துகள் வாங்கியது தொடர்பான அனைத்து கோப்புகளும் மர்மமான தீ விபத்தில் எரிந்து போய்விட்டதாக அதிகாரிகள் கூறியதை'', விசாரணையைச் சீர்குலைக்கும் சதி எனக் குறிப்பிட்டுள்ளது.



கால்நடைத் தீவன ஊழல் பணத்தில் உருவாகியுள்ள உல்லாச மாளிகை

இவையல்லாமல் பத்தாண்டுகளுக்கு முன்பு, 1983-85-ம் ஆண்டுகளில் போலீசாருக்குத் தேவைப்படும் சீருடை, நிழற்குடைகள் போன்றவற்றை வெளிச் சந்தையில் வாங்கிக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இதில் 1 கோடி ரூபாய் அளவிற்கு மோசடிகள் நடந்ததைப் பற்றி தற்பொழுது விசாரித்து வரும் சி.பி.ஐ., ஏழு ஐ.பி.எஸ். அதிகாரிகளைக் கைது செய்யுமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால், லல்லு இந்த அதிகாரிகள் கைது செய்யப்படுவதைத் தடுத்து, அபயம் அளித்து வருகிறார்.

☆☆☆☆

பீகார் அரசின் கால்நடைத் துறையில் கடைநிலை ஊழியராக வேலைபார்த்து வந்த லல்லு பிரசாத், அரசியலில் நுழைந்த பின்பு சரத் யாதவின் கைத்தடியாகச் செயல்பட்டார். 1989-ம் ஆண்டில் மண்டல் பிரச்சினை எரியத் தொடங்கியபொழுது, வி.பி.சிங்கின் ஆதரவையும், யாதவ்-குர்மி சாதி செல்வாக்கையும் கொண்டு முதலமைச்சர் நாற்காலியைக் கைப்பற்றிக் கொண்டார், அவர்.

''ஆடு-மாடு மேய்க்கும் ஏழை சிறுவர்களுக்கு, மேய்க்கும் இடத்திலேயே ஆரம்பக் கல்வி கற்றுத்தர ''சாருவாகன் பள்ளிகள்'; ஒரு கோடி ஏழைகளுக்கு பாதுகாப்பான வீடுகள்; 200 கோடி ரூபாய் செலவில், ஏழைத் தாய்மார்களுக்கு சேலை வழங்கும் திட்டம்; தெருவில் வசிக்கும் ஏழைச் சிறுவர்களை ஐந்து நட்சத்திர விடுதிகளுக்கு அழைத்துச் சென்று உணவு கொடுப்பது; விமானங்களை வேடிக்கை பார்க்கக் கூட்டிச் செல்வது; தாழ்த்தப்பட்டவர்களுக்கு முடி வெட்டி குளிப்பாட்டி விடுவது'' - லல்லுவின் இந்த கவர்ச்சித் திட்டங்களையும், மலிவான விளம்பர உத்திகளையும் காட்டி, அவருக்கு தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்டவர்களின் மீட்பராக முடி சூட்டினர் மண்டல் ஆதரவாளர்கள்.

லல்லுவிற்கு ஆதரவாக பாட்னாவில் நடந்த பேரணி : சாதி அரசியல்



ஆனால் உண்மையென்ன? பீகாரில் தற்பொழுது அம்பலமாயிருக்கும் மாட்டுத் தீவன ஊழலும், நில ஊழலும் தாழ்த்தப்பட்ட-மலைவாழ் மக்கள் அதிகம் வாழும் பீகாரின் தென் பகுதியை மையமாகக் கொண்டு நடந்துள்ளன. மேலும், அம்மாநிலத்தில் ''5000 கோடி ரூபாய் அளவுக்கு ஊழலும் - அதிகார முறைகேடுகளும் நடந்திருக்க வாய்ப்புள்ளதாக'' வரவு - செலவு தணிக்கை அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.


பீகாரில் கிராமப்புறங்களில் வாழும் அடித்தட்டு மக்களின் ஆண்டு வருமானமே 942 ரூபாய் தான்; அம்மாநில அரசு ஊழியர்களுக்கு, பல மாதங்களாக சம்பளம் தரப்படவில்லை; பல முதியவர்கள் ஓய்வூதியத்தை மாதந்தவறாது வழங்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். இந்த அவலமான நிலையிலும், 'பிற்படுத்தப்பட்ட' கும்பலொன்று அரசு கஜானாவைச் சூறையாட அதிகாரம் பெற்றிருப்பதுதான் லல்லுவின் சமூக நீதி!

• மாரி.


படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்



• உத்திரப் பிரதேசத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், கவர்னர் ஆட்சி கொண்டு வரப்பட்டது. இது எதைக் காட்டுகிறது? இந்நிலை எங்குபோய் முடியும்? நீங்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போல, "தொங்கு நிலை பாராளுமன்றம். - பாசிச இராணுவ ஆட்சி அபாயம்" என்பது உண்மையாகிவிடுமா?
- இராவணன், நெய்வேலி.

☆ உத்திரப் பிரதேசத்தில் ஏற்கனவே இருந்து கலைக்கப்பட்ட சட்டமன்றத்தினைப் போன்ற தொங்குநிலைதான் - எந்தக் கட்சியும் நிலையான, பெரும்பான்மை ஆதரவுபெற்ற ஆட்சியை அமைக்க முடியாத இழுபறி நிலைதான் - நடந்து முடிந்த தேர்தலிலும் ஏற்பட்டுள்ளது. சாதி - மதரீதியில் அரசியல் கட்சிகளின் அணிசேர்க்கையும், அதே அடிப்படையில் வாக்காளர்களின் ஆதரவும் தொடர்ந்து நீடிப்பதே இதற்குக் காரணம். இந்த நிலை மாநிலங்கள் அளவில் நீடிக்கும்வரை, ஆளுநர் ஆட்சிப் பிரகடனம் மூலம் தற்காலிகத் தீர்வு காணப்படுகிறது. ஆனால் சாதி, மதரீதியில் மட்டுமல்லாது, வர்க்கம், இனம், மொழி, பிராந்தியரீதியில் பன்முகத் தன்மையுடைய, நாடு முழுவதற்குமான நாடாளுமன்றத் தேர்தல்களில் தொங்குநிலை என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இவற்றையெல்லாம் கடந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, அனைத்திந்திய தேசியம் போன்ற கொள்கை, சித்தாந்தங்களை வைத்தோ, நேரு-இந்திரா போன்ற பரம்பரைக் கவர்ச்சியை வைத்தோ, பெரும்பான்மை பலம் பெற்று, ஒரு கட்சி ஆட்சி என்பது இனிமேலும் சாத்தியமில்லை. காங்கிரசோ சிதைந்து கொண்டிருக்கிறது. அதற்கு தேசிய மாற்றென்று கூறிக்கொள்ளும் பாரதீய ஜனதாவோ எவ்வளவு முயன்றாலும் பார்ப்பன-சனாதன, மேல்சாதி ஆதரவு தவிர வேறெங்கும் பரவிட முடியாது. ஆகவே "தொங்குநிலை நாடாளுமன்றமும்" அதன் உடன்பிறந்த குதிரை வியாபார அரசியலின் விளைவாக "நாடாளுமன்ற அராஜகமும்" தவிர்க்க முடியாதனவாகி விட்டன. நாடாளுமன்றத்தில் பத்து சதவீதம்கூடப் பலம் பெற முடியாத கட்சி ஆட்சி நடத்துவதன் மூலம் ஜனநாயகம் கேலிக் கூத்தாக்கப்பட்டுவிட்டது. அதே சமயம், வெவ்வேறு நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஆட்சிகள் மாறிமாறி வருவதால், அவர்களது விசுவாசிகள் திணிக்கப்பட்டு அரசு எந்திரம் ஊதிப் பெருகி வருகிறது. மறுபுறம் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளாலும், கிரிமினல்மயமாவதாலும் அரசியலே புழுத்து நாறுகிறது. இத்தகைய நிலைமைகளில் சட்டம், ஒழுங்கு, நீதியை நிலைநாட்டுவதாகக் கூறிக்கொண்டு, ஒரு பாசிச பயங்கரவாத ஆட்சியை நிறுவுவதுதான் நாட்டின் ஆளும் வர்க்கத்தின் முன்னுள்ள ஒரே வழி! ஆனால் அதை எதிர்கொண்டு முறியடிப்பதற்கான வலுவுடையதுமான தொழிலாளி வர்க்கமும், அதன் புரட்சி அமைப்பும் இல்லாததுதான் கவலைக்கும் கவனத்துக்கும் உரியது.

• புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் அரசியல் மாற்றம் ஏற்பட்டபின் "புகையிலை, பீடி, மதுபானம்" போன்ற பொருட்களின் உற்பத்தி இருக்குமா? இருந்தால் எந்த முறையில் அவை கட்டுப்படுத்தப்படும்?
- முத்து, உசிலை.

☆ இவற்றின் உற்பத்தியை அடியோடு உடனடியாக நிறுத்தி விட முடியாது. கடின உழைப்புக்கும், குளிர்ப் பிரதேச வாழ்க்கைக்கும், மருத்துவத்துக்கும் தேவையாக உள்ள மதுபான உற்பத்தி தொடரும். ஆனால் கேளிக்கைக்கும், போதைக்கும் தடை செய்யப்படும். தயாரிக்கப்படும் மதுபானமும் வரம்புக்குட்பட்ட காரம் மட்டுமே கொண்டிருக்கும். புகையிலையும், பீடியும் நேரடியாக அவ்வளவு பாதிப்பு ஏற்படுத்துபவை அல்ல. இத்துறையில் பன்னாட்டு தொழிற்கழகங்களின் உற்பத்தியும், கொள்ளையும் நிறுத்தப்படும். புகையிலையும், பீடியும், 'சிகரெட்டும்' போதைக்காக அல்லாது, பண்பாட்டு ரீதியில் பழக்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன. பண்பாட்டு ரீதியிலான பிரச்சாரம், போராட்டம் மூலம் இந்தப் பழக்கங்களைக் கைவிடும்படி மக்களுக்குப் போதிப்பதே சரியானதாக இருக்கும்.

• ஜெயா-சசி கும்பல் சொத்துக்களைப் பறிமுதல் செய்யக் கோரி, ஜூலை 10 - வினோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டத்தைப் பற்றி ம.ஜ.இ.க.-வினர், மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தத்தான் உதவும் எனக் கூறியுள்ளனரே! இது குறித்து தங்களின் விளக்கம் தரவும். மற்றபடி ம.ஜ.இ.க.-வினர் என்ன செய்துகொண்டிருக்கின்றனர் என்பதையும் விளக்கவும்.
- இரா. கதிரவன், நல்லம்பள்ளி.

☆ ம.ஜ.இ.க.-வினர் கூறுவது ஒரு வகையில் சரிதான்! ஜெயா-சசி கும்பல் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதை வலியுறுத்தும் நமது கோரிக்கையின் மீது மக்கள் கவனத்தை ஈர்ப்பதும், அதன்மூலம் ஆட்சியாளர்களை நிர்ப்பந்திப்பதும் தான் நமது நோக்கம். அதற்கான அடையாளமாகவே வினோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம் நடத்தப்பட்டது. நமது போராட்டமும், முழக்கமும் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி, கவனத்தை ஈர்த்து, அவற்றின் நியாயத்தை எடுத்துச் சொல்வதில் வெற்றி பெற்றது சரியானதுதானே. ஆனால் கடந்த பல மாதங்களாக நாம் நடத்திவரும் திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளுக்கெதிரான இயக்கத்தின் தொடர்ச்சிதான் இது என்று முதலாளித்துவ அரசியல்வாதிகளும், பத்திரிகைகளுமே புரிந்து கொண்டபோதும், ம.ஜ.இ.க.-வினர் வெறும் பரபரப்பைப் பார்ப்பதோடு கண்ணை மூடிக்கொண்டு விட்டனர். பாசிச அரசியலின் சமூக அடித்தளத்தைத் தாக்கி அம்பலப்படுத்தும் நமது இந்த இயக்கம், அவர்களுக்கு அவசியமானதாகத் தெரியவில்லை. புலிகளுக்கு வக்காலத்து வாங்குவதன் மூலம் புரட்சி சவடால் அடிப்பதும், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் வழங்குவதை எதிர்த்து "தேசபக்தி" ஆர்ப்பாட்டம் செய்வதும்தான்- இன்றைய முக்கியப் பணியாக ம.ஜ.இ.க.-வினர் மேற்கொண்டுள்ளனர்.

• "கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர் ஜீவா" பற்றி புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாடு என்ன?
- கோவை வாசகர்கள், கோவை.

☆ டாங்கே முதலிய அனைத்திந்திய கம்யூனிசத் துரோகிகளின் விசுவாசமான தமிழ்நாட்டுப் பிரதிநிதிதான் ஜீவா. கம்யூனிச சித்தாந்தத்தை வெறும் மனிதநேய சீர்திருத்தமாகச் சித்தரித்த முன்னோடிகளுள் ஒருவர். இதையே தனது நாவன்மையாலும், எழுத்தாற்றலாலும் கவர்ச்சிகரமாகச் செய்தார். தமிழ்நாட்டு போலி கம்யூனிஸ்டுகளில் பார்ப்பன சனாதன மரபினர், பிற மேல்சாதி வேளாள மரபினர் என இரண்டு பிரிவினர் எப்போதும் உண்டு. இதில் இரண்டாவது மரபைச் சேர்ந்தவர் என்பதால், திராவிடக் கட்சிகளின் செல்லப்பிள்ளையாகக் கருதப்பட்டவர். இதனாலேயே இப்போதும் ஜீவாவின் பெயர் பிரபலமாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## மோசடி நிதி நிறுவனங்கள்:
# நடுத்தர மக்களின் பேராசை பெருநட்டம்

தினசரி பத்திரிகைகளைப் புரட்டினாலே நிதி நிறுவனங்களின் அதிபர்கள் கைது பற்றி பத்திபத்தியாக செய்திகள் தினமும் வெளிவருகின்றன. தமிழக முதல்வர் இந்த மோசடிகளை விசாரிக்க தனி நீதிமன்றம் ஏற்படுத்தப்படும் என அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுவரை சிநேகம், ஒமேகா, திருமகள், தேவி கோல்டு ஹவுஸ், ஜி.என்.எஸ். நிதி மேக்சிமா, ஈஸ்வரி என ஏழு நிதி நிறுவனங்களின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் என 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் சொத்துக்களை முடக்கி வைக்க காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதிலிருந்து காவல் துறைக்கும் - அரசுக்கும் தெரியாமலேயே இம்மோசடிகள் நடந்து வந்துள்ளதாக யாரும் கற்பனை செய்து கொள்ள வேண்டாம்.

சிநேகம் ஃபைனான்ஸ் நிறுவனம் முதலீடு செய்தவர்களுக்கு வட்டியையோ, பணத்தையோ திருப்பித் தரவில்லை. முதலீடு செய்த பணத்தைத் திரும்ப பெற்றவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்; ஆனாலும் அவர்கள் வீடு போய்ச் சேர்வதற்குள் சிநேகத்தின் ரவுடிக் கும்பலால் மிரட்டப்பட்டு அப்பணத்தைத் திரும்பவும் சிநேகம் பைனான்சிலேயே முதலீடு செய்ய வைக்கப்பட்டனர். அவர்களின் மனுக்களை காவல் துறை ஏறிட்டும் பார்த்ததில்லை.

கடந்த ஆட்சியில் கண்ணப்பன், செங்கோட்டையன் போன்ற மந்திரிகளின் முழு ஆதரவு சிநேகத்திற்கு இருந்தது. ஆட்சி மாறி, முதலீட்டாளர்களின் நெருக்கடியும் அதிகரிக்கவே, சிநேகம் உரிமையாளர்களும் நிர்வாகிகளும் தலைமறைவாயினர். கோடிக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டு, இவர்களைப் பாதுகாத்தவர்கள் த.மா.கா. கட்சியைச் சேர்ந்தவர்கள்தான்.

தேவி கோல்டு ஹவுசில் முதலீடு செய்தவர்கள், பணத்தைத் திருப்பிக் கேட்ட போது ரவுடிகளை வைத்து மிரட்டப்பட்டனர். அடித்து உதைத்து விரட்டப்பட்டனர். இதுபற்றி போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை ஏதுமில்லை. வெறுத்துப்போன முதலீட்டாளர்கள் சாலை மறியலில் இறங்கினர்.

அதன் பின் காவல் துறை கமிஷனர் அலுவலகத்தில் வைத்து, இரண்டு நாட்களாக முதலீட்டாளர்கள் சிலருக்கு ரூ.500, ரூ.1000 என பணம் கொடுத்து அனுப்பினர். பின் மீண்டும் தமது அலுவலகத்திலேயே வைத்து பணம் கொடுப்பதாகக் கூறிய தேவி கோல்டு ஹவுஸ் உரிமையாளர், திரும்பவும் பணம் தராமல் ரவுடிகளை வைத்து மிரட்டத் தொடங்கினார். முதலீட்டாளர்கள் திரும்பவும் சாலை மறியலில் இறங்கவே, உரிமையாளரும், நிர்வாகிகளும் கைது செய்யப்பட்டனர்.

இம்மோசடி நிதி நிறுவனங்கள் அனைத்துமே கோடிக்கணக்கில் குவிந்த பணத்தைக் கொண்டு இலாபமீட்டும் தொழிலில் முதலீடு செய்யவில்லை. மாறாக நிலங்கள், வீட்டுமனைகள், மாடமாளிகைகள், உல்லாசக் கார்கள் என சொத்துக்களாகவே வாங்கிக் குவித்துள்ளனர். தவிர, திரைப்பட நடிகைகளுடன் குடியும் கூத்துமாக உல்லாசமாக இருந்துள்ளனர். இப்படி தமது ஆடம்பர, உல்லாச, ஊதாரித்தனமான வாழ்விற்கு முதலீட்டாளர்களின் பணத்தை வாரியிறைத்துள்ளனர். முதலீட்டாளர்களுக்குப் பணத்தைத் திருப்பித் தருவதில்லை என்றே செயல்பட்டுள்ளனர்.

மேட்டுக்குடியினர் தவிர நடுத்தர வர்க்கத்தினரும், சில கீழ்த்தட்டு வர்க்கத்தினரும் பணத்தாசையில் இந்த நிதி நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளனர். கணவனுக்குத் தெரியாமல் மனைவி, மனைவிக்குத் தெரியாமல் கணவன் என முதலீடு செய்து சிலர் பரிதவிக்கின்றனர். அண்டை வீட்டாரிடம் பணம் வாங்கி, இவற்றில் போட்டு இழந்தவர்களும் சிலருண்டு.

இதுவரை காவல் துறையில் புகார் கொடுத்த இருபத்தையாயிரம் பேரின் கணக்குப்படி, தட்சிண், நியூ இந்தியா இன்வெஸ்ட்மெண்ட்ஸ் உட்பட ஒன்பது நிறுவனங்கள் மோசடி செய்த பண மதிப்பு சுமார் 100 கோடி ரூபாய். ஆனால் சிநேகம் பைனான்ஸ் மட்டுமே 200 கோடி ரூபாய்க்கும் மேலாக முதலீட்டுப் பணம் திரட்டியுள்ளது. இப்படி மேக்சிமா, தேவி கோல்டு ஹவுஸ், ஈஸ்வரி போன்றவை, நூற்றுக்கணக்கான கோடி பண முதலீடு திரட்டியுள்ளதாக வண்ணவண்ண விளம்பரங்களை வெளியிட்டுள்ளன. அந்த மற்ற பிற முதலீட்டாளர்கள் யார்? அவர்கள் ஏன் இதுவரை காவல் துறையிடம் முறையிடவில்லை?

காவல் துறையோ, "100 கோடி மோசடி செய்துள்ளனர்; இந்நிறுவனங்களின் வீடு, நிலம் என சொத்து மதிப்பும் ரூ.100 கோடி உள்ளது" எனக் கணக்குக் காட்டுகிறது. அப்படியானால் இந்தப் போலீசும், ஆட்சியாளர்களும் யாரைப் பாதுகாக்கிறார்கள் எனச் சந்தேகம் எழுகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கையினால் பங்குச் சந்தை மோசடி, தொலைபேசி தனியார்மயமாக்கலில் ஊழல் எனப் பல்வேறு ஊழல் மோசடிகளில் பல்லாயிரம் கோடி ரூபாய்களை, விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் கொள்ளையிட்டுள்ளனர்.

அதே வழியில் மக்களை ஏய்த்தும், முன்னாள்-இந்நாள் ஆட்சியாளர்களின் பினாமிகளாகவும், ஊழல் அதிகாரிகளின் மோசடிப் பணத்தை முதலீடு செய்யும் ஒரு இடமாகவும் மாற்றி பல கோடி ரூபாய்களை இந்நிதி நிறுவனங்கள் மோசடி செய்துள்ளன. தமது சேமிப்பை இழந்தவர்கள் காவல் துறையிடம் முறையிட்டு அலைகின்றனர். வேறு நபர்கள், திருடனுக்கு தேள் கொட்டிய கதையாக முழிக்கின்றனர்.

ரிசர்வ் வங்கி, இந்நிறுவனங்கள் வழங்குவதாகக் கூறும் கூடுதல் வட்டி, பரிசுகளை வழங்க வாய்ப்பில்லை எனத் தெரிந்தும், இவைகளைத் தடை செய்ய எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக 30 நிறுவனங்களின் பெயர்களை வெளியிட்டு, 'இவற்றில் முதலீடு செய்பவர்களின் பணத்திற்கு பாதுகாப்பு இல்லை; மோசடி நடந்தால் நடவடிக்கை எடுக்க இயலாது; சட்டத்தில் இடமில்லை' எனக் கை கழுவிக் கொண்டது. அப்படியானால் அரசு, அதிகாரிகள், சட்டம், சட்டசபை, நாடாளுமன்றம் என இதெல்லாம் எதற்கு? மோசடி செய்பவனைப் பாதுகாக்கவா?

கபிலன், ஆசைத்தம்பி போன்றோர் உருட்டுக் கட்டைகளுடன் வலம்வந்து பணம் பறித்தனர். இந்நிதி நிறுவனங்களோ கூடுதல் வட்டி, பரிசுகள் என கவர்ச்சித் திட்டங்களுடன், போலீசு பாதுகாப்புடன் பணம் பறித்தனர்.

இது அம்பலப்பட்டுப் போனதாலே, இன்று அவசர அவசரமாக நடவடிக்கை எனப் போக்குக் காட்டுகின்றனர்.

• குணசீலன்

ஏமாற்றப்பட்ட முதலீட்டாளர்களால் அடித்து நொறுக்கப்பட்ட சிநேகம் ஃபைனான்ஸ் அலுவலகம்



www.padippakam.com

# உ.பி. தொங்குநிலை முன்னே பாசிச அபாயம் பின்னே

இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் ஒரு கேலிக்கூத்து! இந்தியாவின் ?கப் பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் சட்டமன்றத் தேர்தல் முடிந்த பிறகும் கூட, இன்னமும் ஒரு அரசாங்கம் அமைக்க முடியாமல், நாடாளுமன்ற ஜனநாயகம் தீராத நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. ''தொங்குநிலை'' என்ற கொள்ளை நோய், மத்தியில் மட்டுமின்றி இப்போது மாநிலங்களையும் பிடித்தாட்டுகிறது. அதைவிட, கொள்கை - இலட்சியம் பேசும் எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும், கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகள் - பிழைப்புவாதிகள் தான் என்பதை உ.பி. விவகாரம் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டது.

கடந்த அக்டோபர் மாதத்தில் உ.பி.யில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா கூட்டணி 176 இடங்களையும், ஐக்கிய முன்னணி - சமஜ்வாடி கட்சி கூட்டணி 134 இடங்களையும், காங்கிரசு - பகுஜன் சமாஜ் கூட்டணி 100 இடங்களையும் கைப்பற்றின. 425 பேர் கொண்ட சட்டமன்றத்தில், எந்தக் கூட்டணியும் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாமல் தொங்குநிலை ஏற்பட்டதால், யாரும்' ஆட்சி அமைக்க முடியாமல், இழுபறி நீடிக்கிறது. இந்நிலையில், காங்கிரசு ஏஜெண்டான ஆளுநர் பண்டாரி, கட்சித் தாவல் - குதிரை வியாபார அரசியலைத் தடுப்பதாகக் கூறி, மீண்டும் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தியுள்ளார். ஆளுநருக்கு இத்தகைய அதிகாரமளிக்கும் 356-வது சட்டப் பிரிவை ரத்து செய்ய வேண்டுமென இது நாள் வரை முழங்கி வந்த போலிக் கம்யூனிஸ்டுகளும், ஐ.மு. கட்சிகளும், இப்போது வேறு வழியில்லாத நிலையில் ஆளுநர் இப்படிச் செய்வது சரியானதுதான் என்று இரட்டை நாக்குடன் நியாயப் படுத்துகின்றன. ஆளுநரின் நடவடிக்கையை எதிர்த்து, பாரதீய ஜனதா கட்சியினர் ஒருவார காலத்துக்கு கண்டன ஆர்ப்பாட்டங்கள் - பொதுக் கூட்டங்களை நடத்தினர். ஆளும் வர்க்கச் சட்ட வல்லுநர்களில் ஒரு பிரிவினர் ஆளுநரின் நடவடிக்கையை எதிர்க்கும் அதே சமயம் மற்றொரு பிரிவினர், தொங்குநிலை - இழுபறிநிலையில் ஆளுநரின் நடவடிக்கையால் தற்காலிகமாக ஒரு தீர்வு ஏற்பட்டுள்ளது என்று ஆதரிக்கின்றனர்.

தற்போதைய தற்காலிகத் தீர்வுக்குப் பிறகாவது கட்சிகள் - கூட்டணி. ?ில் மாற்றம் ஏற்பட்டு ஒரு ஆட்சி அமையுமா என்றால், அதற்கும் உத்திரவாதமில்லாமல் போய் விட்டது. ஏனெனில், ஒவ்வொரு கட்சிக்கும் சாதி-மத அடிப்படையிலான வெவ்வேறு வகையான சந்தர்ப்பவ ? நோக்கங்கள் உள்ளன.

பாரதீய ஜனதா அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ள போதிலும், அதனால் தனியாக ஆட்சி அமைக்க முடியாது. குறைந்த பட்சம் மேலும் 30 எம்.எல்.ஏக்கள் கட்சி மாறி வந்து ஆதரித்தால் தான் இது சாத்தியம். காங்கிரசு, சமஜ்வாடி, பகுஜன் சமாஜ் கட்சிகள் தமது எம்.எல்.ஏ.க்களை பாதுகாப்பாகச் சிறை வைத்து, அடைகாத்து வரும் சூழ்நிலையில் இது சாத்தியமில்லை. மேலும், வகுப்புவாத பாரதீய ஜனதாவை எதிர்த்து அரசியல் நடத்திவரும் காங்கிரசும், சமஜ்வாடி - ஜனதா தளமும், பாரதீய ஜனதா' ஆட்சியை வெளியிலிருந்து ஆதரிக்க அடிப்படையே இல்லை. எஞ்சியிருப்பது பகுஜன் சமாஜ் கட்சிதான். காங்கிரசுடனான தேர்தல் கூட்டணியை முறித்துக் கொண்டு, பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர அக்கட்சியும் தயாராகவே உள்ளது. ஆனால் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவி மாயாவதியை முதல்வராக்க வேண்டும் என்று அது நிபந்தனை விதிக்கிறது.

தான் முதல்வராகும் வாய்ப்பு இதனால் பறிபோய்விடும் என்பதால், பாரதீய ஜனதாவின் முன்னாள் முதல்வரான கல்யாண்சிங்கும், அவரது கோஷ்டியினரும், இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். மேலும் குஜராத்தை இழந்துவிட்ட நிலையில், தங்களது தலைமையில் ஆட்சி அமையாமல், தலித்துகளின் பகுஜன் சமாஜ் கட்சி தயவில் அமைவதை பாரதீய ஜனதாவிலுள்ள மேல்சாதி எம்.எல்.ஏ.க்கள் ஏற்கவில்லை. மத்தியில் ஆட்சியமைக்க முயற்சித்து, 13 நாட்களில் அது தோல்வியடைந்ததைப் போல, உ.பி.யிலும் நடந்துவிடக் கூடாது; எனவே பாரதீய ஜனதா ஆட்சியமைக்க முயற்சிக்க வேண்டாம் என்று பா.ஜ.க.வின் மற்றொரு பிரிவினர் வாதிடுகின்றனர். வேறு சிலர், குஜராத்தின் வகேலா பாணியில் பாரதீய ஜனதாவிலிருந்து கும்பலமாக விலகி, தனிக்கட்சியாகி காங்கிரசு - பகுஜன் சமாஜ் கூட்டணியுடன் சேர்ந்து ஆட்சியமைக்க முயற்சிக்கின்றனர்.

அடுத்து, அதிக இடங்களைக் கைப்பற்றிய இரண்டாவது பெரிய கட்சியான சமஜ்வாடி கட்சித் தலைவர் முலயம்




கல்யாண் சிங்குக்கு, மாயாவதி முதல்வராக வரக் கூடாது; மாயாவதிக்கு, முலயம் சிங் முதல்வராக வரக் கூடாது; முலயம் சிங்குக்கு இவர்கள் இருவருமே பதவிக்கு வரக் கூடாது. உ.பி. அரசியலை ஆட்டிப் படைக்கும் இந்த தனிநபர் விருப்பு வெறுப்புகளும், சாதி அரசியலும் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கி விட்டன.



படிப்பகம்

www.padippakam.com

சிங்கை முதல்வராக்க, காங்கிரசு - பகுஜன் சமாஜ் கட்சிகளுடன் ஐ.மு. கட்சிகள் பேரங்கள் நடத்தின. ஆனால் முலயம் சிங்கை, "குண்டர் படைத் தலைவன்; மா∴பியா தலைவன்" என்று வாய் ஓயாமல் சாடிவரும் பகுஜன் சமாஜ் கட்சி இதை ஏற்க மறுத்துவிட்டது. அக்கட்சித் தலைவி மாயாவதிக்கு மத்திய அரசில் அமைச்சர் பதவி தருவதாகவும், அதற்கீடாக சமஜ்வாடி கட்சியை ஆதரிக்குமாறும் ஐ.மு. தலைவர்கள் நடத்திய பேரங்களும் தோற்றுப் போய் விட்டன.

அதேபோல, பகுஜன் சமாஜ் - காங்கிரசு கூட்டணி ஆட்சிக்கு ஐ.மு. கட்சிகள் ஆதரவு தருவது என்கிற முயற்சியும் தோல்வியடைந்து விட்டது. ஏனெனில், ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் முலயம் சிங், "மாயாவதியைத் தவிர வேறு யாரை வேண்டுமானாலும் முதல்வராக்குங்கள். நாங்கள் ஆதரிக்கத் தயார். ஆனால் மாயாவதி முதல்வராக ஐ.மு. ஆதரவு தருமானால், ஐக்கிய முன்னணியிலிருந்தும், மத்திய அமைச்சர் பதவியிலிருந்தும் நானும், சமஜ்வாடி கட்சியும் விலகுவதைத் தவிர வேறு வழியில்லை" என்று நிபந்தனை விதித்தார். பகுஜன் சமாஜ் கட்சியினரோ முலயம் சிங் முதல்வராகக் கூடாது; அதே சமயம் தலித் பெண்ணாகிய மாயாவதியை முதல்வராக்க முலயம் சிங் கட்சியினர் ஆதரவு தர வேண்டும் என்கின்றனர்.

ஏறத்தாழ ஒருமாத காலமாக கட்சி அலுவலகத்திலேயே சிறை வைக்கப்பட்டுள்ள பகுஜன் சமாஜ் கட்சி எம்.எல்.ஏ.க்களில் பலர், தங்களைச் சிறைப்படுத்தி வைத்துள்ளதை எதிர்த்துக் கலகம் செய்து வருகின்றனர். வேறு சிலர், மாயாவதி தலைமையில் எப்படியும் ஆட்சி அமைந்து விடும் என்ற நம்பிக்கையில் அவமானத்தைச் சகித்துக் கொண்டு அடைபட்டுக் கிடக்கின்றனர்.

மாயாவதி முதல்வரானால், கூட்டணியிலுள்ள காங்கிரசு கட்சியினர் பலருக்கு அமைச்சர் பதவி கிடைக்கும். அந்த வாய்ப்பும் நழுவிப் போகிறதே என்கிற ஆத்திரத்திலும் விரக்தியிலும் "ஐ.மு. அரசுக்கு காங்கிரசு ஆதரவு தருவதை வாபஸ் பெற வேண்டும்" என்று உ.பி. மாநில காங்கிரசார் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக, காங்கிரசின் புதிய தலைவரான சீதாராம் கேசரி, "ஐ.மு. அரசைத் தொடர்ந்து ஆதரிப்போம் என்று கருத வேண்டாம்" என தேவேகௌடா அரசுக்கு "உதார்" விட்டார். ஆனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, ஒரு காலத்தில் உ.பி.மாநிலம் காங்கிரசின் கோட்டையாக இருந்த நிலைமை போய், இன்று மணற்கோட்டையாகச் சரிந்து விட்டது. காங்கிரசிலேயே பலர் கட்சி தாவக் காத்திருக்கும் நிலையில், கேசரியின் இந்த மிரட்டல் கோமாளித்தனமாகி விட்டது.

உ.பி.யில் தொடரும் இழுபறியால், எந்தக் கட்சி கூட்டணி ஆட்சி அமைக்கும்? ஆட்சி அமைத்தாலும் அது எத்தனை நாள் நீடிக்கும்? என்பது கேள்விக்குறியாகி விட்டது. மேலும் எந்தக் கட்சிக்கும் - கூட்டணிக்கும், மற்ற கட்சி - கூட்டணி மீது நம்பிக்கையில்லை. அதை விட ஒவ்வொரு கட்சியிலும் உள்ள பல்வேறு கோஷ்டிகள் பதவி வெறியோடு கட்சி தாவக் காத்திருப்பதால் கட்டுப்பாட்டுடன் எந்தக் கட்சியும் நீடிக்கவும் வாய்ப்பில்லை.

உ.பி.யில் 'குடியரசு'த் தலைவர் ஆட்சித் திணிப்பை எதிர்த்து, பாரதீய ஜனதா நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் கூச்சல் எழுப்பக் கூடும் என்பதால், 'குடியரசு'த் தலைவர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரவும், அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ள பாரதீய ஜனதாவை ஆட்சி அமைக்க அழைக்கவும் உ.பி.மாநில ஆளுநர் பரிசீலித்து வருவதாகச் செய்திகள் வருகின்றன. அவ்வாறு நடந்தால் கட்சி தாவல் - 'குதிரை வியாபார அரசியல்' பெருக்கெடுத்து நாடாளுமன்ற அராஜகம் தீவிரமாகிவிடும். அதன் விளைவாக நிலையான ஆட்சி, சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பெயரில் பாசிச சர்வாதிகார ஆட்சி திணிக்கப்படும்.

உ.பி.யின் தொங்குநிலை - இழுபறி நிலைமைகளைப் பார்த்து, நிலையான ஆட்சிதான் நல்லது என்ற முடிவுக்கு வரத் தேவையில்லை. இன்றைய கேடு கெட்ட அரசியல் - பொருளாதார அமைப்புக்குள்ளேயே தீர்வைத் தேடி, முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய அவசியமுமில்லை. நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த எந்தவொரு ஓட்டுக் கட்சியின் நிலையான ஆட்சியும் பயன்பட்டது மில்லை.

இந்தியா மட்டுமல்ல, உலகெங்கும் பல கட்சி முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி முறை உள்ள நாடுகள் அனைத்திலும் இத்தகைய தொங்கு நிலை - இழுபறி நெருக்கடிகள் தீவிரமாகிவிட்டன. இவற்றுக்கு மாற்றாகக் கூறப்படும் இரண்டு கட்சி ஆட்சி முறை உள்ள நாடுகளில் அக்கட்சிகளுக்குள் கோஷ்டி மோதல்கள் தீவிரமாகி, மீளமுடியாத நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளன. எனவே, மக்களுக்குப் பயன்படாத, மக்களுக்கே எதிரான, நாடாளுமன்ற போலி ஜனநாயக ஆட்சி முறையைத் தூக்கியெறிய வேண்டும். கிராமங்கள் மற்றும் ஆலைகள் மட்டத்திலிருந்து உழைக்கும் மக்களே நேரடியாக நிர்வாகம் செய்யும் ஒரு புதிய ஜனநாயக அரசியல் அமைப்பு முறைதான் நாட்டின் முன்னேற்றத்துடன் கூடிய ஒரு நிலையான ஆட்சியாக அமையும்.

• பாரி

# இந்திய ஜனநாயகத்தின் விலை!

விருத்தாசலம் நகரில் இயங்கிவரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, கந்து வட்டி ரவுடிகளான தன்ராஜ் - வெங்கடேசன் கும்பலை எதிர்த்து கடந்த பிப்ரவரி மாதம் இயக்கமெடுத்தனர். அப்போராட்டத்தின் பொழுது இந்த ரவுடிகளுக்குத் துணை நின்ற முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ., ஆர்.டி. அரங்கநாதன் மற்றும் போலீசு துணை கண்காணிப்பாளர் சந்திரசேகரையும் அம்பலப்படுத்தினர். இதன் காரணமாக போலீசு பு.மா.இ.மு.வின் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுத்து வந்தது.

போலீசாரின் இந்த சனநாயக விரோதிப் போக்கிற்கு எதிராக, பு.மா.இ.மு. சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து 27.09.96 அன்று விருத்தாசலத்தில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி பெற்றனர். இவ்வழக்கிற்கு ரூ. 742.50 செலவானது. எனவே, இப்பொதுக் கூட்டத்திற்கு "ஜனநாயகம் ரூபா 742.50" எனத் தலைப்பிட்டு விளம்பரப்படுத்தினர், பு.மா.இ.மு. தோழர்கள். இது நகர் முழுவதும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

இப்பொதுக் கூட்டத்தில் ம.க.இ.க. தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். "ஜெயா - சசிகலா கும்பலின் பினாமி சொத்தான தஞ்சை விநோதன் மருத்துவமனையைக் கைப்பற்ற, ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு. இணைந்து நடத்திய போராட்டத்தை விளக்கிப் பேசி, இப்போராட்டப் பாதையே நாட்டை விடுவிக்கும் பாதை" எனத் தனது உரையில் குறிப்பிட்டார்.

கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே பலத்த மழை பெய்யத் தொடங்கிய போதும், பொது மக்கள் ஒரு மணி நேரம் காத்திருந்து பொதுக்கூட்ட உரையைக் கேட்டனர்; நள்ளிரவு வரை நடந்த புரட்சி கர கலை நிகழ்ச்சிகளையும் கண்டு, புதியதொரு உத்வேகமும் உற்சாகமும் அடைந்தனர். "உண்மை பேசக் கூடிய, அரசியல் பேசக் கூடிய ஒரே அமைப்பு நக்சல்பாரி அமைப்பு" எனப் பொது மக்கள் பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது. தகவல்:

பு.மா.இ.மு., விருத்தாசலம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆப்கான்: மதவெறி - யுத்தப் பிரபுக்களின் காலடியில்....

இந்தியாவின் வடமேற்கே அமைந்துள்ள அண்டை நாடான ஆப்கானிஸ்தானில், அந்நாட்டு அதிபர் பர்கானுதின் ரப்பானி மற்றும் அவரது இராணுவத் தளபதி அகமத் ஷா மசூதுக்கும், (முஸ்லீம் மதப் பிரிவான) சன்னி மத குரு முல்லா முகமது உமர் தலைமையில் அமைந்த தாலிபான் இயக்கத்திற்கும் இடையே நடந்து வரும் ஆட்சி அதிகாரத்திற்கான உள்நாட்டுப் போரில் கடந்த செப்டம்பர் மாத இறுதியில் ஒரு புதிய திருப்புமுனை ஏற்பட்டது. பத்தானிய (Pashtun) இனக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சன்னி பிரிவு மத அடிப்படைவாதிகளின் இயக்கமான தாலிபான், ஆப்கான் தலைநகர் காபூலைக் கைப்பற்றி, அந்நாட்டின் 75 சதவீதப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.

1992-ஆம் ஆண்டில் முஜாஹிதீன் போராளிக் குழுக்களால், முன்னாள் சோவியத் யூனியனின் கைப்பாவையாக ஆப்கானை ஆண்டு வந்த நஜிபுல்லா அரசு வீழ்த்தப்பட்டவுடனேயே, அக்குழுக்களிடையே அதிகாரப் போட்டி தொடங்கியது. பத்தானிய இனக் குழுவைச் சேர்ந்த குல்புதீன் ஹெக்மத்யார் தலைமையிலான ஹிஸ்ப் - இ - இஸ்லாமி குழுவை ஓரங்கட்டிவிட்டு, தாஜிக் இனப் பிரிவைச் சேர்ந்த அகமத் ஷா மசூதின் ஜமாத் - இ - இஸ்லாமி குழு, அப்பொழுது நடந்த அதிகாரப் போட்டியில் வென்றது. நஜிபுல்லா அரசு கவிழும் சமயத்தில் எதிர்தரப்புக்கு ஓடி வந்த உஸ்பெக் இனக் குழுவைச் சேர்ந்த அப்துல் ரஷீத் தோஸ்தமும் மற்றும் 10-க்கும் மேற்பட்ட குழுக்களும் அச்சமயத்தில் மசூத்தை ஆதரித்தன. இந்நிலையில், 1994-ஆம் ஆண்டு இறுதியில் பாகிஸ்தானால் உருவாக்கப்பட்டு, ஆயுதப் பயிற்சி - நிதியுதவி அளிக்கப்பட்ட தாலிபானும் அதிகாரத்திற்கான போட்டியில் குதித்தது.


இந்த அதிகாரப் போட்டி நாய்ச் சண்டையின் காரணமாக, இன்று ஆப்கான் நாடு மூன்று பிரிவுகளாகப் பிளவுபட்டு போயுள்ளது. அந்நாட்டின் 32 பிராந்தியங்களுள் இருபதினைக் கைப்பற்றியுள்ள தாலிபான், முன்னேறித் தாக்கும் நிலையில் உள்ளது. அந்நாட்டின் வடக்கேயுள்ள பஞ்ஷிர் சமவெளிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள ரப்பானியும் - மசூதும் அச்சமவெளியைத் தளமாகக் கொண்டு தாலிபானை எதிர்த்து வருகின்றனர். தோஸ்தம், சலாங் சுரங்கப் பாதைக்கு மேற்கே மசர் - இ - ஷரிப் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு, அதிகாரம் செலுத்தி வருகிறார்.

கடந்த இரு ஆண்டுகளாக தலைநகர் காபூலை மையமாக வைத்து நடந்து வந்த உள்நாட்டு போர், தாலிபான் காபூலைக் கைப்பற்றிய பின் வடக்கு நோக்கி நகர்ந்தது. மசூதை வீழ்த்தி, பஞ்ஷிர் சமவெளியையும் அதை ஒட்டியுள்ள சலாங் சுரங்கப் பாதையையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர தாக்குதலைத் தொடுத்து வருகிறது தாலிபான். இதன்மூலம் அரசியல் ரீதியாக தனது நிலையை வலுவாக்கிக் கொள்வதோடு, மத்திய ஆசியாவிலுள்ள முன்னாள் சோவியத் யூனியனின் உறுப்பு நாடுகளான உஸ்பெகிஸ்தான், தாஜிகிஸ்தான், துர்க்மேனிஸ்தான் நாடுகளை ஆப்கானோடு இணைக்கும் தரைவழிப் பாதையைத் தன்வசம் எடுத்துக் கொள்ளவும் முயலுகிறது.

இந்நிலையில் மிகுந்த இராணுவ பலமும், உஸ்பெகிஸ்தானின் ஆதரவையும் பெற்றுள்ள தோஸ்தமோடு கூட்டணி சேர்ந்து கொண்டு, எதிரியை நிர்மூலமாக்கி விட ஒரு சேர முயன்றன தாலிபானும், ரப்பானி - மசூத் குழுவும். இக்கூட்டணி முயற்சியில் தாலிபானுக்கு ஆதரவாக பாகிஸ்தான் நேரடியாகவே களத்தில் குதித்தது. ஆயினும், ரசியா, ஈரான் மத்திய ஆசிய நாடுகள் ஒன்றிணைந்து தோஸ்தம் - மசூத் கூட்டணியை உருவாக்குவதில் வெற்றி கண்டு விட்டன. ஆப்கானில் பாகிஸ்தானின் ஆதரவு பெற்ற அரசு அமைவது காஷ்மீர் போராளிகளை வலுப்படுத்தும் என்பதால், இந்தியா ரப்பானி - மசூத் கூட்டணியை ஆதரித்து வருகிறது. தொடர்ந்து நடைபெற்று வரும் உள்நாட்டு போரில், மசூத் படைகள் காபூலை ஒட்டியுள்ள ஜபலஸ் சிராஜ், சாரிகர், சலாங் நகரங்களை தாலிபானிடமிருந்து மீளக் கைப்பற்றுவதில் வெற்றி கண்டுள்ளன.

நாட்டின் தென் பகுதியிலும் தலைநகர் காபூலிலும் இன்று நிலவும் இந்த 'அமைதி'யைவிட, போரே மேலானது என்கின்றனர் ஆப்கானியப் பெண்கள். ஏனெனில், தாலிபான் தான் வென்றெடுத்த பகுதிகளிலெங்கும் 'ஷாரியத்' எனும் முஸ்லீம் மத சட்டத்தை அமுல்படுத்தி, மத சர்வாதிகாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு வருகிறது. ''பெண்கள் கல்வி கற்கவும், வேலைக்குச் செல்லவும் தடை; பாத நுனி கூடத் தெரியாதபடி பர்தா அணிந்து கொண்டுதான் பெண்கள் கடைத் தெருவுக்குச் செல்ல வேண்டும்; மது மற்றும் போதை மருந்துப் பழக்கம் உள்ளவர்களும், முறை கேடான பாலியல் உறவு கொள்பவர்களும் கல்லால் அடித்துக் கொல்லப்படுவர்; திருடர்களின் கரங்கள் துண்டிக்கப்படும்; மேற்கத்திய பாணி உடைகளை அணியக் கூடாது; ஆண்கள் தாடி வளர்த்துக் கொண்டு, தலைப்பாகை அல்லது மதக் குல்லாய் அணிந்து கொள்ள வேண்டும்'' என்பன போன்ற மதச் சட்டங்களின் மூலம் ஆப்கானை மத்திய கால காட்டுமிராண்டி தனத்திற்குள் தள்ளி விட முயலுகிறது தாலிபான்.

ரப்பானி அரசாங்கத்தை இதுநாள் வரை ஆதரித்து வந்த அமெரிக்கா, தாலிபான் காபூலைக் கைப்பற்றியவுடனேயே இம்மதவெறியர்களின் அரசுக்கு அங்கீகாரம் அளித்தது. ஈரானின் ஷியா மதவெறி பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறும் அமெரிக்காவின் சனநாயக அரிதாரம் இதனால் கலைந்து போனது பற்றிக் கூட கிளிண்டன் அரசு கவலை கொள்ளவில்லை. ஆப்கான், தெற்கு - மேற்கு - மத்திய ஆசிய நாடுகளை இணைக்கும் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருப்பது தான் அமெரிக்காவின் அனுசரணைக்குக் காரணம். ஆப்கானில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தாலிபானைப் பதவியில் அமர்த்துவதன் மூலம், ''மேற்காசியாவில் தனக்கு தலைவலியாக இருக்கும் ஈரானைக் கண்காணிப்பது; சோவியத் யூனியன் சிதைந்து உருவாகியுள்ள மத்திய ஆசிய நாடுகளான துர்க்மேனிஸ்தான், தாஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தானின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வளங்களைத் தடையின்றிச்






படிப்பகம்

www.padippakam.com

# நியாயமான தண்டனைதான்

தாலிபான் இயக்கத்தினர் காபூலைக் கைப்பற்றியவுடனேயே, ஐ.நா. அலுவலகத்திலுள் பதுங்கி வாழ்ந்து வந்த ஆப்கானின் முன்னாள் அதிபர் நஜிபுல்லாவையும், அவரது தம்பி ஷாபுர் அகமத்ஸியையும் வெளியே இழுத்து வந்து, சுட்டுக் கொன்று, அவர்களது உடல்களைத் தூக்கில் தொங்க விட்டனர்.



நஜிபுல்லா (இடது) மற்றும் அவரது தம்பியின் சடலங்கள்

தாலிபானின் இத்தண்டனையை 'காட்டுமிராண்டித்தனம்' எனக் கண்டிக்காத நாடுகளே இல்லை எனலாம். இந்திய ஆளும் வர்க்கமும், வலது - இடது போலிக் கம்யூனிஸ்டுகளும் ஒருபடி மேலே போய், "நஜிபுல்லா சிறந்த தேசபக்தர்; இனக்குழுக்களாகப் பிளவுபட்டு, பின் தங்கியிருந்த ஆப்கானை நவீனப்படுத்த, விவசாய சீர்திருத்தங்கள், பெண்கள் கல்வி, சனநாயகம் - சமத்துவத்தை ஆப்கானில் புகுத்திய கம்யூனிஸ்ட்; ஆப்கான் உள்நாட்டு போரினால் சிதறிப் போய்விடாமல் தடுக்க, தானே முன் வந்து பதவி விலகிய தேசியவாதி; போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கிய கருணாமூர்த்தி" என அவரின் தலைக்குப் பின்னே ஒளிவட்டம் கட்டின.

நஜிபுல்லா ஆப்கானில் கொண்டு வந்த சீர்திருத்தங்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் போன்றவை தான்; முன்னாள் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கே அவை பயன்பட்டன. அதிபர் பதவியில் ஒட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, மதப் பிற்போக்குவாதிகள் - இனக்குழுத் தலைவர்களிடம் சமரசம் செய்து கொண்டார், அவர். முஜாஹிதீன் போராளிகள் காபூலைக் கைப்பற்றிய பின், தண்டனையில் இருந்து தப்பவே ஆப்கானை விட்டு இந்தியாவிற்கு ஓடி வந்துவிட முயன்றார். அதிபராவதற்கு முன்னர் ஆப்கானின் இரகசிய போலீசு படைப் பிரிவின் தலைவராக இருந்த சமயத்தில், சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய 80,000 மொஜாஹிதீன் போராளிகளையும் மக்களையும் இரகசியமாகக் கொன்றொழித்த அரசு பயங்கரவாதிதான் நஜிபுல்லா. மனித குல வரலாறெங்கும் துரோகிகள் இப்படித்தான் மரணமடைந்துள்ளனர்; நஜிபுல்லாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

சுரண்டுவது - என்ற நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளத் துடிக்கிறது அமெரிக்கா.

அதே பொழுதில் ரசியாவும் - ஈரானும் மத்திய ஆசிய நாடுகள் மற்றும் தோஸ்தம் - மசூத் கூட்டணி மூலம் அமெரிக்காவின் கனவைச் சிதறடித்து வருகின்றன. இதனால் ஒரே குழுவின் தலைமையின் கீழ் ஆப்கானைக் கொண்டு வருவது ஏகாதிபத்தியங்களுக்கு இயலாததாக உள்ளது. இந்நிலையில் ஐ.நா.வின் மூலம் தாலிபான் - மசூத் - தோஸ்தமிடையே அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஆசியா கண்டத்தில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து வீரஞ்செறிந்த ஆயுதப் போராட்டம் நடத்திய நாடுகளுள் ஆப்கானும் ஒன்று. ஆயினும் இப்போராட்டங்கள் புரட்சிகர சித்தாந்தத்தின் - வர்க்கத்தின் தலைமையில் நடைபெறாததால், முதலாளித்துவ சீர்திருத்தங்கள் கூட ஒரே சீராக அந்நாடெங்கும் அமுல்படுத்தப்படவில்லை. அந்நாட்டு மக்கள் இன்னும் பத்தானியர்கள், தாஜிக், உஸ்பெக் எனப் பல்வேறு இனக் குழுக்களாகப் பிளவுண்டு கிடக்கிறார்கள். இது ஏகாதிபத்தியங்களுக்கும், உள்நாட்டு மதவெறி - அதிகார வெறி கொண்ட இராணுவக் கும்பல்களுக்கும் நாட்டை ஆக்கிரமிக்கவும் - கூறு போடவும் சாதகமாய் உள்ளது. ஆப்கானிய மக்கள் இக்கும்பல்களுக்கு எதிராக புரட்சிகர சித்தாந்தத்தை ஆயுதபாணியாகக் கொண்டு எழுந்து நிற்கவில்லையெனில், ஆசியாவிலும் ஒரு ருவாண்டா உருவாவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

• செல்வம்

> ஆப்கான் நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் புரட்சிகர சித்தாந்தத்தின் - வர்க்கத்தின் தலைமையில் நடைபெறாததால், முதலாளித்துவ சீர்திருத்தங்கள் கூட அந்நாட்டில் ஒரே சீராக அமுல் படுத்தப்படவில்லை.



காபூலை விட்டு வெளியேறும் ஆஃப்கானியக் குடும்பம்: சொந்த நாட்டிலேயே அகதி வாழ்க்கை



படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி...**

பெற்றுத் தருவதிலும் கிரிமினல் கும்பல் வெற்றி பெற்று விட்டது. வழக்கறிஞர் சண்முக சுந்தரம் வழக்கிலும், சந்திர லேகா மீது திராவகம் வீசிய வழக்கிலும் கூட இதே மாதிரி நிலைமை தான் நீடிக்கிறது. சசிகலா - நடராஜன் குடும்பத்தினர் பதுக்கி வைத்திருந்த அரிசி, நெல் மூட்டைகளைக் கையும் களவுமாகக் கைப்பற்றிய வழக்கில் கூட, நீதிபதியைச் சரிக்கட்டித் தப்பிவிட்டனர். தற்பொழுது நடைபெற்று வரும் விசாரணை - சோதனைகள் பற்றி ஜெயா - சசி கும்பலுக்கு முன் கூட்டியே தகவல் தெரியும்படிச் செய்து, முக்கிய ஆவணங்களையும், பொன் - பொருட்களையும் பதுக்கி வைத்துக் கொள்வதற்கு போதிய அவகாசமளிக்கப்படுகிறது.

ஜெயா - சசி குடும்பத்தினர் மீது எடுக்கப்படும் சட்ட பூர்வ நடவடிக்கைகள் எல்லாம் கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து, அது உருகி கண்களை மறைக்கும் போது பிடிக்கும் முயற்சியாகத்தான் உள்ளது. குறைவான மதிப்பைக் காட்டி சொத்துக்கள் வாங்கியது, ரிசர்வ் வங்கி அனுமதியின்றி அந்நியச் செலாவணி பரிமாற்றங்கள் செய்தது, பத்திரப் பதிவு முறை கேடுகள் போன்ற வழக்குகள் தாம் விசாரித்து நடத்தப்படுகின்றன. முன்னாள் மந்திரிகள் மீது இலஞ்ச-ஊழல் வழக்குகள் நடக்கின்றன. ஆனால் பொதுச் சொத்தைக் சூறையாடிய கிரிமினல் குற்றத்துக்காக, நேரடியாக வழக்குத் தொடுத்து தண்டிப்பதற்கான முயற்சியும் இல்லை; சட்டத்தில் அதற்கான இடமுமில்லை என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. ஜெயா,சசி, நரசிம்ம ராவ், சுக்ராம் போன்ற அரசியல் ஊழல் கிரிமினல்களை சட்டம், வழக்கு, விசாரணை என்கிற வழக்கமான வழிகளில் போய்த் தண்டிக்கும் முயற்சி என்பது பானைக்குள் யானையை அடக்க முயற்சிப்பதுதான். இப்படிப்பட்டவர்கள் தண்டிக்கப்படாமல் தப்பி விடுவதற்கு வசதியாகத்தான் சட்ட, நீதி முறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல; இப்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் மேல் மட்டத்திலுள்ள ஒரு சில நபர்கள் மீதுதான். இந்த நச்சுமரம் அனைத்து மட்டங்களிலும் பல கிளைகளாகப் பிரிந்து, விழுது - வேர் விட்டு வளர்ந்திருக்கிறது. கருணாநிதி, மூப்பனார், சிதம்பரம் போன்ற ஓட்டுக்கட்சி தலைவர்கள் தமது அரசியல் ஆதாயம் வேண்டி பிரச்சாரம் செய்வதற்கு மேல், எந்த நடவடிக்கையும் மேற் கொள்ள மாட்டார்கள். ஓட்டுக் கட்சித் தலைவர்களுக்குள் இது ஒரு மரபு; எழுதப்படாத ஒப்பந்தமாகி விட்டது. உலகறிந்த, இவ்வளவு தூரம் அம்பலப்பட்டுப் போன குற்றவாளிகளைக் கூட தண்டிக்க முடியாத இந்த சட்டமும் நீதித்துறையும் இருந்து என்ன பயன்? சென்னை மாநகராட்சியில் நடந்த தொழிலாளர் சம்பள ஊழல் வழக்கில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு தான் தீர்ப்பு வந்தது. ''தாமதமாக வழங்கப்படும் நீதி என்பது அநீதிதான்''.

இந்த உண்மைகளை ஏற்றுக் கொண்டுதான் அரசியல் குற்றவாளிகளை விசாரிப்பதற்கு ''லோக்பால்'' என்ற நீதி அமைப்பை ஏற்படுத்தப் போவதாக வாக்குறுதியளிக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே லோக்பால் அமைப்பு உள்ள மாநிலங்களிலும் இதே நிலைமைதான் உள்ளது. அந்த ஏற்பாடு இன்னொரு திசைதிருப்பும் பித்தலாட்டம்தான் என்பதை மறந்து விடக் கூடாது. மற்ற பிற கிரிமினல் குற்றவாளிகளுக்குத் தரப்படும் வாய்ப்புகள் அனைத்தையும் மறுத்து விட்டு, நேரடியாகவே சொத்துக்களைப் பறிமுதல் செய்து, கடுஞ்சிறைத் தண்டனைக்குள்ளாக்கும் வகையில் அரசியல் கிரிமினல் குற்றவாளிகளுக்கெதிரான மக்கள் இயக்கம் தேவை.

# வனத்துறைக் காவலர்கள் - வாலறுந்த நரிகள்

உடுமலை வட்டத்திலுள்ள ஆண்டியூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பழனிச்சாமி. 17.09.96 அன்று நள்ளிரவில் தோட்டத்திற்கு சென்று கொண்டிருந்த இவரை, ஊருக்குள் திடீரெனப் புகுந்த வனத்துறை வானரப் பட்டாளங்கள் வழி மறித்தன. விவசாயக் கூலி வேலை செய்து வயிற்றைக் கழுவும் இவர் மீது சந்தனக் கட்டைத் திருடியதாய் குற்றஞ் சுமத்தி தாக்கினர், வனத்துறைக் காவலர்கள். அவ்வூரைச் சேர்ந்த கிருஷ்ணசாமி, ''பழனிச்சாமி அப்படிப்பட்ட நபரில்லை; அவர் கூலித் தொழிலாளி'' எனக் கூறிய பின்னும் கூட, அதிகாரத் திமிரெடுத்த அக்கும்பல் பழனிச்சாமியை அடித்துத் துன்புறுத்துவதை நிறுத்தவில்லை. மேலும் அக்காவலர்கள் நாச்சம்மாள் என்பவரின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, சந்தனக் கட்டைகளைச் சோதனையிட வந்ததாக மிரட்டினர்.

வனத்துறையின் இந்த அட்டூழியங்களைக் கேள்விப்பட்ட அக்கிராம மக்கள் நள்ளிரவு நேரத்திலும் ஒன்றாகத் திரண்டு வந்து, வனத்துறையின் ஜீப்பை மறித்து பழனிச்சாமியை விடுவித்தனர். அப்போராட்டத்தில் பொதுமக்களோடு கைகோர்த்து நின்ற பகத்சிங் இளைஞர் நற்பணி மன்றத்தினர், ''எதன் அடிப்படையில் கிராமத்தினுள் நுழைந்து விசாரிக்கின்றீர்கள்?'' எனத் துணிவோடு கேட்டனர். ஆப்பசைத்த குரங்காக மாட்டிக் கொண்ட வனத்துறை காவலர்கள், ''அதிகாரி கிருஷ்ணகுமார் தொலைபேசி மூலம் உத்தரவு கொடுத்தார்'' என மழுப்பினர். கிராம மக்கள் இம்மழுப்பலை ஏற்றுக் கொள்ளாததோடு, ''இனி இதுபோல் தவறு செய்ய மாட்டோம்'' என எழுதிக் கொடுத்து விட்டுச் செல்லுமாறு கூறினர். அக்காவலர்கள் இதற்கு மறுத்து விட்டதால், அவர்களை இரண்டு மணி நேரம் சிறை பிடித்தனர் கிராம மக்கள். அதன்பின், ஊர் பொது மக்களும் பகத்சிங் இளைஞர் நற்பணி மன்றமும், ''அனுமதி பெறாமல், தேடுதல் வேட்டைக்கு ஊருக்குள் நுழையக் கூடாது'' என எச்சரித்து அனுப்பி விட்டனர்.

மறுநாள் கிராமத்திற்குள் நுழைந்த வனத்துறையைச் சேர்ந்த மூன்று காவலர்களை மீண்டும் சிறை பிடித்தனர், கிராம மக்கள். அச்சமயத்தில் பகுதியைச் சேர்ந்த ம.தி.மு.க. பிரமுகர் புவியரசு, வனத்துறை அலுவலர்கள் மாலை 4 மணிக்குள் வந்து மன்னிப்பு கேட்பதாக உறுதியளித்துள்ளனர்; அப்படி வராவிட்டால் நாளை சாலை மறியல் செய்வோம்'' எனக் கூறியதன் பேரில், சிறை பிடிக்கப்பட்ட காவலர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் அதிகார வர்க்கமோ ''கூலிகளால் என்ன செய்து விட முடியும்?'' என இறுமாந்து, அன்று மாலை மன்னிப்பு கேட்க வரவில்லை.

அதிகாரிகளின் அலட்சியம் கண்டு கொதித்தெழுந்த மக்கள் மறுநாள் சாலை மறியலுக்குத் தயாராயினர். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்ட வனத்துறை தலைமை அதிகாரி முத்து கிராமத்திற்கு வந்தார். அவருக்கு முன்பாகவே கிராமத்தினுள் நுழைந்த போலீசு பட்டாளம், மக்களை சமாதானப்படுத்தி சாலை மறியலைத் தடுத்து விட முயன்று கொண்டிருந்தது. இவர்களைத் தொடர்ந்து வட்டாட்சியரும் கிராமத்திற்கு வரவே, அவர் முன்னிலையில் விசாரணை நடந்தது.

அதன் முடிவில் வட்டாட்சியரும், வனத்துறை தலைமை அதிகாரியும் காவலர்களின் அத்துமீறலுக்கு வருத்தம் தெரிவித்தனர்; இனி இது போன்ற பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது எங்களது பொறுப்பு என உறுதியளித்தனர். இதன் பின் சாலை மறியலைக் கைவிடுவதாக பொது மக்களும் அறிவித்தனர்.

தகவல்:
ம.க.இ.க., கோவை.



படிப்பகம்

www.padippakam.com

# இறைச்சிக் கூடங்களை நவீனப் படுத்து! உள்நாட்டு தேவைக்கே இறைச்சி! இறைச்சி ஏற்றுமதியைத் தடை செய்!

பொள்ளாச்சி அருகே உருவாகி வரும் நவீன இறைச்சி ஆலை குறித்து கடும் சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. அங்கே சுமார் 250 ஏக்கரில், 168 கோடி ரூபாய் முதலீடு செய்து இறைச்சியைப் பதனப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஆலையை நிறுவ தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த இறைச்சி ஆலையை நிறுவுவதற்கு, தற்போது கோவை மாவட்டத்தில் உள்ள மேல்சாதிகளான வெள்ளாளக் கவுண்டர் மற்றும் நாயுடுகளிடையே வேரூன்றிவரும் ஆர்.எஸ்.எஸ். - பாரதிய ஜனதாவும் சில சமூக சேவை நிறுவனங்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இதேபோன்று ஐதராபாத் அருகே, "அல் கபீர்" என்னும் ஒரு இறைச்சி ஆலையைக் கடந்த ஆண்டு நிறுவியபோதும் இதே ஆர்.எஸ்.எஸ். - பாரதிய ஜனதா கட்சியினர் வேறு சில சமூக சேவை அமைப்புகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்தியாவில் எங்கு நவீன இறைச்சி ஆலை அமைந்தாலும் அவற்றை ஆர்.எஸ்.எஸ். - பாரதிய ஜனதா கும்பல் கடுமையாக எதிர்ப்பதற்கான உண்மையான நோக்கம் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடியதுதான். இந்த ஆலைகள் இசுலாமிய முதலாளிகளால் வைக்கப்பட்டு, முக்கியமாக அரபு மற்றும் பிற இசுலாமிய நாடுகளுக்குத்தான் ஏற்றுமதியாகின்றன. அடுத்து, இந்து மத வெறியை அடிப்படையாகக் கொண்ட அக்கும்பலின் "பசுவதைத் தடை" கோரிக்கைக்கு எதிரான செயலாக இதைக் கருதுகிறார்கள்.

மாடுகளை அறுப்பதும், உண்பதும் அருவெறுக்கத்தக்கது, அசுத்தமானது; கேவலமானது, அதைச் செய்பவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்கிற கண்ணோட்டமும், அனுகுமுறையும் கொண்ட மேல்சாதிகளான கவுண்டர்களும், நாயுடுகளும் உட்பட பலர் பொள்ளாச்சியில் இறைச்சி ஆலை அமைவதை எதிர்க்கின்றனர். ஆனால் அதற்கு நேரெதிரான வாழ்க்கை முறையைக் கொண்ட அந்தப் பகுதியில் அதிகமாக வாழும் தாழ்த்தப்பட்ட அருந்தியினர் இந்த ஆலையில் தமக்கு வேலை வாய்ப்பும் கிட்டும் என்று நம்புகின்றனர். திராவிட, தமிழின அமைப்புகளும் இந்த ஆலை நிறுவுவதை ஆதரிக்கின்றனர்.

இந்த ஆலை நிறுவப்படுவதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறி எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது:

✱ நாளொன்றுக்கு 300 மாடுகள் அறுக்கப்படும், இதனால் தமிழ்நாட்டில் கால்நடைகள் எல்லாம் பூண்டோடு ஒழிக்கப்படும். விவசாயம் பாதிக்கப்படும். பால் வளம் தரும் பசுக்களே இல்லாமல்போகும்.

✱ இறைச்சிக்கூடக் கழிவு நீராலும், கழிவுப் பொருட்களாலும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். பாரம்பரியத் தொழில்கள் பாதிக்கப்பட்டுத் தமிழ்நாட்டுப் பொருளாதாரமே சீரழிந்து போகும்.

இறைச்சி ஆலை எதிர்ப்பாளர்கள் சொல்லும் இந்தக் காரணங்கள் உண்மைக்கு மாறானவை என்று கால்நடை மருத்துவர் மற்றும் விவசாய நிபுணர்கள் கூறுகின்றனர். இவர்கள் கூறும் விளக்கங்களில் சில ஏற்கக்கூடியதாக இருக்கின்றன; வேறு சிலவற்றை ஏற்கவும் முடியாது.

50 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட, ஆரோக்கியமற்ற நிலையில் மொத்தம் 183 கால்நடை அறுவைக்கூடங்களே தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றில் தமிழ்நாட்டின் ஆண்டு இறைச்சி நுகர்வில் 30 சதவீத அளவுக்கே இறைச்சி வெட்டுதல் நடக்கிறது; 70 சதவீத அளவு சுகாதாரமற்ற முறையில் இறைச்சி வெட்டி விற்கப்படுகின்றன. நவீன இறைச்சிக் கூடங்களால் சுகாதாரமான, குளிர்பதன வசதியுடன் கூடிய மலிவான விலைக்கு இறைச்சி கிடைக்கும். தாவர உணவைவிட மாமிச உணவும் நமது மக்களுக்கு அவசியமாக உள்ளது. பயனற்ற கால்நடை வளர்ப்பும், மேய்ச்சல் நிலப் பற்றாக்குறையும், நாட்டு மாடுகளின் பால்வளக் குறைவும் தற்போதைய கால்நடை வளர்ப்பை பயனற்ற தாக்கி விட்டது.

இந்த விளக்கமானது நவீன இறைச்சி ஆலை நிறுவுவதை கொஞ்சமும் நியாயப்படுத்தவில்லை. ஏனெனில் இந்த ஆலை உள்நாட்டுத் தேவை, சந்தைக்காக வைக்கப்படவில்லை. முற்றிலும் ஏற்றுமதிக்கானதே. ஆகவே, மக்கள் தேவைக்காக கரிசனப்படுவதாகக் கூறுவது பொய்யானதே! பால்வளப் பெருக்கத்துக்காக உயர்ரக மாடு வளர்ப்பு, இறைச்சிக்காக மாட்டுப் பண்ணைகள் அமைப்பது, மேய்ச்சல் நிலங்களைப் பராமரித்து விரிவுபடுத்துவது என்ற திட்டங்களே கிடையாது; குறிப்பாக இந்த இறைச்சி ஆலைகளுடன் தொடர்புடைய இறைச்சி மாடு வளர்ப்புப் பண்ணைகளுக்கான திட்டங்களே கிடையாது. அப்படி ஏதோ நவீனப்படுத்துவதைப்போல பேசி நியாயப்படுத்துவது மோசடியே.

அதேசமயம், நவீன இறைச்சி ஆலை வைப்பதால் சுற்றுச்சூழல் பாதிக்கும் என்பது தவறு; அறுக்கப்படும் கால்நடைகளின் ஒவ்வொரு பொருளும் பயன்படும்; கழிவுப் பொருள், கழிவு நீர் என்று சுற்றுச்சூழலைப் பாதிக்கும் என்பதும் தவறு; ஐதராபாத்தில் உள்ள "அல் கபீர்" ஆலையே இதற்குச் சான்று என்று கூறிவது சரியானதுதான்.

சென்னை, வடாற்காடு அம்பேத்கர், திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள தோல் தொழிற்சாலைக் கழிவு நீரைப்போலவோ, கிழக்குக் கடற்கரை நெடுக அமையும் இறால் பண்ணைக் கழிவு நீரைப்போலவோ சுற்றுச்சூழலையும், நிலத்தடி நீரையும் பாதிக்கும் என்று சொல்லமுடியாது. விவசாய விளை நிலங்களை ஆக்கிரமித்தும், விவசாயத் தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்தும் பொருளாதாரத்தைச் சீரழித்துவிடும் என்று கூறமுடியாது.

மேலும் விவசாயத்தில் இயந்திரங்கள் புகுத்தப்படுவதால் கால்நடை வளர்ப்பு குறைந்து வருகிறது. பாலுக்கும், இறைச்சிக்கும் கால்நடை வளர்ப்பையும் இறைச்சி அறுவை மற்றும் பதப்படுத்துவதையும் நவீனப்படுத்தவும், ஆலைகள் வைக்கவும் வேண்டும். ஆனால் நம் நாட்டு மக்களே புரதச் சத்துப் பற்றாக்குறையாலும், மாமிச விலையேற்றத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கும்போது, அன்னியச் செலாவணியைக் குறிவைத்து ஏற்றுமதிக்காக இந்த நவீனப்படுத்துதல் நடப்பதை நாம் ஏற்கமுடியாது. கெண்டுகி, நெஸ்லே, காட்பரீஸ் போன்ற அந்நிய, பன்னாட்டு தொழில்கழகங்களே நமது நாட்டுக்கு வந்து உணவுத் தொழில் நடத்திக் கொள்ளையடிக்கும்போது, நமது நாட்டிலிருந்து இறைச்சி, இறால் போன்றவற்றை "மலிவு" விலைக்கு ஏன் எற்றுமதி செய்ய வேண்டும்?

இந்த உண்மைகளை மூடிமறைத்து, தன்து இசுலாமிய எதிர்ப்பு - மதவெறி நோக்கங்களுக்காக சுதேசி சாயம் பூசிக் கொண்டு நவீன இறைச்சி ஆலை எதிர்ப்பு நாடகமாடுகின்றது, ஆர்.எஸ்.எஸ்.- பாரதிய ஜனதா கும்பல். மறுபுறம் தொழில் வளப் பெருக்கம், நவீனமயமாக்கம், அன்னியச் செலாவணி குவிப்பு என்ற பெயரில் "காட்" ஒப்பந்த அடிப்படையில் தேச துரோகச் செயலும் தொடர்கிறது.

இவற்றை முறியடிக்கும் வகையில் மலிவு விலையிலும், சுகாதாரமான முறையிலும் உள்நாட்டு தேவைக்கான நவீன இறைச்சி ஆலைகளை நிறுவி நடத்தும்படி கோரிப் போராடுவதே சரியானதாகும். இதன்மூலம் அந்நியச் செலாவணியில் கொள்ளை இலாபம் கிடைக்காதுதான்; எனினும் கணிசமான இலாபமீட்டவும் முடியும்.

● ஆர்.கே.

படிப்பகம்

Published and Owned by A. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.

www.padippakam.com



“அனைவருக்கும் வீடு” - பிரதமர் தேவே கௌடா தனது கரங்களில் தூக்கி காட்டுகிறாரே ஒரு நூல், அது வெளியிடும் செய்திதான் இது. இந்த நூலை வெளியிட்ட கையோடு, நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் வாழும் ஏழைகளுக்கு வீடு வழங்கும் நோக்கம் ,கொண்ட கருத்தரங்கத்தினையும் தொடங்கி வைத்தார் அவர். “தனது அரசு 250 கோடி ரூபாய் செலவில், ‘தேசிய சேரி மேம்பாட்டுத் திட்டத்’தைத் திட்டியிருப்பதாக”க் கூறி, பார்வையாளர்களை வாய் பிளக்க வைத்தார் பிரதமர். மறுநிமிடமே, “இப்பணத்தை உடனே ஒதுக்கீடு செய்ய முடியாது” எனக் கம்மிய குரலில் கூறி, இத்திட்டம் ஏட்டுச் சுரைக்காய் தான் என்பதையும் போட்டு உடைத்தார். “ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து வீடு கட்டுபவர்கள் மீது அதிக வரி விதிக்கலாம்; சட்டத்திற்குப் புறம்பாக அடுக்கு மாடி கட்டுபவர்களிடம் அபராதம் வசூலிக்கலாம்; இதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம்” என “ராபின் ஹூட்” திட்டமெ[illegible]யும் கூறினார் தேவே கௌடா. ஆண்டிகள் கூடி மடம் கட்[illegible]ய கதையாய் முடிந்தது கருத்தரங்கம்.




# இதுதான் இன்றைய இந்தியா



இதோ இந்தப் படத்தில் நாம் காண்பது ஜப்தி நடவடிக்கையே[illegible] அல்லது பொது இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டவர்களை போலீசும், அதிகாரிகளும் அப்புறப்படுத்தும் காட்சியோ அல்ல. பம்பாயில் கஜனன் புரிவாடி என்ற பகுதியில் 70 வருடங்களுக்கும் மேலாக சட்டபூர்வமாகக் குடியிருந்தவர்களைத்தான், மூட்டை முடிச்சுகளோடு துரத்துகிறது பம்பாய் மாநகராட்சி. சேரியாய் இருந்த அந்த இடம், இனி கண்ணைப் பறிக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பாகவும், பளபளக்கும் வணிக வளாகமாகவும் மாறிவிடும். சேரிகளை மட்டுமல்லாது, சிவசேனாவின் ஆசியோடு ஆலை நிலங்களையும் விழுங்கி வருகின்றன பம்பாயின் ‘ரியல் எஸ்டேட்’ முதலைகள். சேரிகளும் மறைந்து, ஆலைகளும் ‘அவென்யு’க்களாக மாறிய பின்பு, பம்பாய் எழிலும் தூய்மையும் நிறைந்த நகரமாகி விடுமாம்!?

“அனைவருக்கு[illegible]ன்ற கவர்ச்சி கோஷம் ஒருபுறம்; ஒண்டிக் குடித்தனத்தில் வாழ்[illegible] மக்களை அடித்து துரத்[illegible] நமது நகரம் தூய்[illegible]யாகி[illegible]து’ என்ற வக்கிர மகிழ்ச்சி மறுபுறம். இவற்றிற்கு நாம் முடிவு காணுவது எப்போது?

படிப்பகம்